NESON'S
Funeral Undertakers
FLORIST
CASKETS EMBALMING
FUNERAL COACHES
No. 563, Hospital Road,
Vembadi Juuction, Jaffna.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/50

அந்தியகால சேவைக்கு
உங்கள் அருகிலேயே இருக்கும்
அன்பன்!
"நேசன்ஸ்"
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர் வளையங்கள்
★ எம்பாமிங்
நேசன்ஸ்
(வேம்படிச் சந்தி.)
563, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஒளி 03 புரட்டாதி மீ 03 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 18 (19-09-1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 247

## அமைதிப்படை விலகல் தொடர்பான

# உடன்பாடு நேற்று கைச்சாத்து;

# நாளை முதல் யுத்த நிறுத்தம்!

## மூன்று குழுக்கள் நியமிப்பது குறித்து கூட்டறிக்கையில் தகவல்

கொழும்பு, செப்டம்பர் 19

இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து அமைதிப் படையை விலக்குவது தொடர்பாக, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நேற்றுக் காலை உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

அதனையடுத்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இந்திய அமைதிப் படையின் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை நாளை புதன் கிழமை காலை 6 மணி முதல் இடைநிறுத்தி வைப்பதற்கு இந்தியா இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யுத்த நிறுத்த அவதானிப்புக்குழு, சமாதானக் குழு, பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு ஆகிய மூன்று குழுக்களை உடனடியாக நியமிப்பது பற்றியும் அந்தக் கூட்டறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அமைதிப்படை விலகல் தொடர்பான உடன்படிக்கையில் இலங்கையின் தரப்பில் வெளியுறவு அமைச்சுச் செயலாளர் திரு. பேர்னட் திலகரத்னவும், இந்தியாவின் சார்பில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. எல். எல். மெஹ்ரோத்திராவும் கைச்சாத்திட்டனர்.

இதனையடுத்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா ஆகியோரின் கூட்டறிக்கை வாசகங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

அந்தக் கூட்டறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படையின் விலகலைத் துரிதப்படுத்துவதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது.

1989 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் அமைதிப் படையினர் அனைவரையும் விலக்கிக்கொள்வதற்கு இந்தியா உறுதியளித்துள்ளது.

இந்திய அமைதிப்படை கட்டம் கட்டமாக திருப்பி அழைக்கும் நடவடிக்கை கடந்த ஜூலை 29இல் மீண்டும் ஆரம்பமானது.

**பாதுகாப்பு ஒப்படைப்பு**

இதேபோன்று டிசம்பர் 31 உடன் முடிவடையும் அடுத்த மூன்று மாதங்களில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இந்திய அமைதிப்படை கொண்டிருந்த பாதுகாப்புப் பணிகள் மாகாணப் பொலீஸ் படை உட்பட இலங்கை அதிகாரிகளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈரோஸ் இயக்கம் வரவேற்பு

கொழும்பு, செப் 19

இலங்கையும், இந்தியாவும் நேற்றுச் செய்து கொண்ட உடன்பாட்டை ஈரோஸ் வரவேற்று உள்ளது.

அமைதிப்படையின் யுத்த நிறுத்தம் நிரந்தர நடவடிக்கையாக இருக்கும் என்றும் இது அமைதிப் பேச்சை நடத்த வழி வகுக்கும் என்றும் திரு. பாலகுமாரன் தெரிவித்தார் என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதிகாரப் பகிர்வு குறித்து வழங்கிய உறுதி மொழியை இலங்கை அரசு நிறைவேற்றும் என்று ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கப் பிரமுகர் திரு. இளங்கோ நம்பிக்கை தெரிவித்தார். (ஓ எ)

## ஏழாவது ஷரத்து....!

புதுடில்லி, செப் 19

யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கும்போது படையினர் மீது தாக்குதல் அல்லது சீண்டுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அதற்கு படையினர் பதிலடி கொடுப்பார்கள்.

இவ்வாறு நேற்றைய உடன்பாட்டின் ஏழாவது ஷரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று புதுடில்லியில் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-9)

## ஒவ்வொரு எம். பிக்கும் பத்து மெய்க்காப்பாளர்!

யாழ்ப்பாணம், செப் 19

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் பத்து மெய்ப் பாதுகாவலர்களை வைத்துக் கொள்ள அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது.

இந்த மெய்க்காப்பாளர்களுக்கான சம்பளம் அரசினால் வழங்கப்படும்.

பிஸ்டலில் இருந்து தானியங்கி ரைபிள்கள் வரை இவர்கள் வைத்துக்கொள்ளலாம்.

"இதன்படி பார்த்தால் 225 எம். பிக்களின் மெய்ப் பாதுகாவலர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 250 ஆக இருக்கும்.

"இப்பொழுதே அரசாங்க அமைச்சர் ஒருவர் தன்னைப் பாதுகாக்க 64 ஆயுதபாணிகளை வைத்திருக்கிறார்" என்றும் ஓர் இராணுவ அதிகாரி கொழும்பில் தெரிவித்தார்.

முன்னர் எம். பி. ஒருவர் ஐந்து மெய்ப் பாதுகாவலர்களை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. வன்செயல்கள் அதிகரித்து வந்ததைத் தொடர்ந்து அந்த எண்ணிக்கை மிகச் சமீபத்தில் பத்தாக உயர்த்தப்பட்டதாக தமிழ் எம். பிக்கள் வட்டாரங்களில் இருந்து ஊர்ஜிதம் செய்யப்பட்டது. (அ-எ-9)

## பேர்லினில் ஈழத் தமிழருக்கு வீசா நீடிப்புச் சலுகை!

மேற்கு பேர்லினில் வசிக்கும் நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழர்களுக்கு ஜேர்மன் அரசாங்கம் வீசாவை நீடித்துச் சலுகை வழங்கி உள்ளது.

மேற்கு பேர்லினில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் வசித்து வருகிறார்கள்; இவர்களில் நூற்றுக்கணக்கானோரின் வீசாக்கள் கடந்த ஜூலை மாதத்துடன் காலாவதியாகி விட்டன.

எனினும் இலங்கையில் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாகத் தாம் அங்கு செல்லமுடியாது எனத் தெரிவித்துச் சம்பந்தப்பட்டவர்கள் அரசுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து அவர்களின் வீசாவை 1990 டிசம்பர் வரை நீடித்துச் சலுகை வழங்க மேற்கு ஜெர்மன் அரசு இணக்கம் தெரிவித்தது. வீசாக்களும் நீடிக்கப்பட்டன.

மேற்கு பேர்லினில் வசித்து வரும் இலங்கையரில் பலரும் இப்போது தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர், குறைந்த எண்ணிக்கையினரே சமூக நலன் பணத்தைப் பெற்று வாழ்கிறார்கள். (உ-க)

## வவுனியாவில் 'ரைம்பொம்' படையினர் மீட்டனர்

வவுனியா, செப் 19

வவுனியா கச்சேரிக்கு முன்னால் நேற்று குறித்த நேரத்தில் வெடிக்கும் 'ரைம்பொம்' ஒன்று வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பிளாஸ்டிக் கொள்கலன் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த இந்தக் குண்டு காலை 9, 30 மணிக்கு வெடிக்கக்கூடியதாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்ததாம்.

இதுகுறித்து தகவல் கிடைத்ததும் படையினர் அவ்விடத்திற்கு விரைந்து, அதனைச் செயலிழக்கச் செய்து, அப்புறப்படுத்தினர். (உ-164)

## ஹர்த்தாலை அடுத்து வடபகுதி நேற்று ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், செப் 19

யாழ்ப்பாணத்தில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த வாரம் நீர்வேலிப் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதல் ஒன்றின் போது மரணமான குருநகரைச் சேர்ந்த ஈ. என். டி. எல். எவ். உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாகவே குருநகர் மக்கள் இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

ஹர்த்தால் நடவடிக்கையை அடுத்து நகரில் உள்ள தேநீர்க் கடைகள் உட்பட அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருந்தன; தியேட்டர்களும் அலுவலகங்களும், வங்கிகளும் மூடப்பட்டிருந்தன.

வெளியூர்களுக்கான அரச, தனியார் பஸ் சேவைகள் காலையில் நடைபெற்ற போதிலும் உள்ளூர் சேவைகளில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் தொடர்ச்சியாக ஷெல் வீச்சு

### இளைஞர் பலி; பெண் படுகாயம்

பருத்தித்துறை, செப் 19

பருத்தித்துறையில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட ஷெல் வீச்சில் ஓர் இளைஞர் பலியானார், பெண் ஒருவர் படுகாயமுற்றார்.

புற்றளையைச் சேர்ந்த உ. ரங்கன் (சின்னபாபு) என்னும் 19 வயது இளைஞரே மரணமானவர் ஆவார்.

நேற்றுக்காலை 8, 15 மணியளவில் பருத்தித்துறை முகாமில் இருந்து பழைய சந்தை வழியாக படையினர் வெளியேவர முயன்றனர் என்றும்—

அப்போது படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதை அடுத்து சுமார் ஒரு மணித்தியாலம் வரையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வதிரியில் நடந்த தேடுதல்

வல்வெட்டித்துறை, செப். 19

வதிரி, இரும்பு மதவடி, வடுவாக்கட்டைப் பகுதிகள் நேற்றுக்காலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டன.

தேடுதலின்போது வடுவாக்கட்டை வைரவர் கோவிலடிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் அவ்வழியால் சென்ற இளைஞர் ஒருவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார் எனக் கூறப்பட்ட போதிலும் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

காயமடைந்தவர் கொற்றாவத்தை, இறப்பாவளையைச் சேர்ந்த துரை தங்கவேலாயுதம் (வயது 26) என்பவர் ஆவார்.

இவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவர் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை. (ஓ-160)

## ஆசிரியர்களின் சம்பள கொடுப்பனவு தாமதமாகும்

யாழ்-மாவட்ட ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் ஒரு சில நாட்கள் தாமதிக்கலாம் என அறிய வருகிறது.

கல்வி அமைச்சில் இருந்து சம்பளத்திற்குரிய பணம் இது வரை வந்து சேராததே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

இன்னும் ஒரு சில தினங்களில் இந்தப் பணம் வந்து சேர்ந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-9)

## முச்சந்தி முரளி



மூன்று மாத முயற்சியில, ஆறு கிழமையாப் பேசி உடன்பாடு ஒண்டு வந்திருக்கு; பெரிய காரியம், எல்லாம் சரியா நடந்தேற வேணும்... அதில தான் எல்லாம் தங்கியிருக்கு...!

## தினசரி ரயில் சேவை; முதல் நாளே தாமதம்!

கொழும்பு — யாழ் தினசரி ரயில்சேவை நேற்று ஆரம்பமானது.

கொழும்பில் இருந்து நேற்றுக்காலை புறப்பட்ட ரயில் முதல் நாளான நேற்றே தாமதித்தே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ரயில் சேவை நடக்கவில்லை; இன்று செவ்வாய்க்கிழமையே இரு இடங்களிலிருந்தும் சேவைகள் நடைபெறும்.

யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை நேற்றுக்காலை 5. 45 க்கு கொழும்பிலிருந்து ஆரம்பமானது.

குருநாகல் ரயில் நிலையத்தில் மூன்றரை மணிநேரம் ஏற்பட்ட தாமதித்தினால் மாலை 6. 30 மணிக்கே வந்து சேர்ந்தது.

இதே ரயில் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கோட்டை நோக்கிப் புறப்படும். (அ 9-10)

## மேலும் 300 ஆசிரியருக்கு யாழ். மாவட்டத்தில் கடன்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ் - கல்வி அலுவலகம் மேலும் 300க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு சம்பள முற்பணக் கடனை வழங்க உள்ளது.

இதற்கென 2 கோடி ரூபாவை கல்வி அமைச்சு, யாழ். கல்விப் பகுதிக்கு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

ஒதுக்கப்பட்ட பணம் சில தினங்களில் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ் கல்விப் பகுதிக்கு வழங்கப்பட்டிருந்த ஒருகோடி ரூபா, 170 பேருக்கு ஏற்கெனவே சம்பள முற்பணக் கடனாக வழங்கப்பட்டிருந்தது. (அ-9)

## அமிரின் இடத்துக்கு எம். பியாக சிவசிதம்பரம்

திரு. அ. அமிர்தலிங்கத்தின் மறைவினால் காலியான இடத்திற்கு கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தேசியப் பட்டியல் மூலம் எம். பியாக நியமிக்கப்படவிருக்கின்றார் என்று பி.பி.சி. அறிவித்தது.

அடுத்த மாதம் திரு. சிவசிதம்பரம் கொழும்பு சென்று எம். பி. பதவியை ஏற்பார் என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

திரு. சிவசிதம்பரம் தற்போது லண்டனில் தங்கியிருக்கிறார்.

திரு. அமிர்தலிங்கமும் திரு. யோகேஸ்வரனும் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் திரு. சிவசிதம்பரம் காயங்களுடன் தப்பியதும் பின்னர் அவர் சிகிச்சை பெறுவதற்காக லண்டன் சென்றதும் தெரிந்தவையே! (அ எ)

## அரசு - ஜே. வி. பி. யுத்த நிறுத்தம் உடன்தேவை

### முஸ்லீம் லீக் ஜனாதிபதிக்கு யோசனை

கொழும்பு, செப் 18

★ நாட்டில் அமைதியும், சமாதானமும் இயல்பு நிலையும் உருவாக்கப்படுவது அவசியம்; அதன்பொருட்டு ஜனதா விமுக்தி பெரமுனையுடன் (ஜே. வி. பி.) உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

★ அமைதியை உறுதிப்படுத்தும் விதத்தில் தற்காலிக அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்; பிரதான தற்காலிக அரசில் ஜே. வி. பியையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் சேர்த்துக் கொள்வது அவசியமானது. கட்டா

(6 ஆம் பக்கம் பார்க்க)

**சுபநேரம்**
19 - 09 - 1989
புரட்டாதி — 03
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: பரணி
சுபநேரம்:
10-33 முதல் 12-03 வரை
ராகுகாலம்:
03 03 முதல் 04-03 வரை

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எமயிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் Latest Computer-Books) கதைப்புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சைவசமயமான வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (மண்டேலா ரேடர் புத்தகசாலை) இல. 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [1551]

### காணி விற்பனைக்கு

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் அருகாமையில் வீடு கட்டக் கூடிய காணி 4 பரப்பு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: க. மகாதேவன் தெட்டிலிப்பாய் கோண்டாவில். (2369)

முல்லைத்தீவு மாங்குளம் மெயின் வீதியில் முத்தையன் கட்டிற்கு அண்மையில் (சுருவேலன் கண்டல்) 5½ ஏக்கர் நீர்ப்பாசன வசதி உடைய வயல் காணி உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: R. Nanthakumar. 17, Pinto-Place off HamPden lane) Wellawtte. [2204]

### இறைச்சிக் கோழி

புரொயிலர் இறைச்சிக் கோழி சேவல் முட்டை இட்டு இழைந்த கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு மொத்தமாக எடுப்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். [2382]

### தவறிவிட்டது

கந்தையா முத்தக்குமாரசாமி அடையாள அட்டை 672430259 V தவறிவிட்டது கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [2387]

### செங்கமாரி

சிறுநீர் மஞ்சளாகவோ, சிவந்தோ போனால் செங்கமாரி சரலைப் பாதிக்கும்; எந்நிலையிலும்குணப்படுத்தலாம்; வாதம், வலி, குன்மம், சூதக வாயு, சிரங்கு, காமாலை நோய்களிலும் திறமைபெற்ற வயது வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் வேலணை. (1845)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சு சேவற் குஞ்சுகள் 20 ஆம் திகதி புதன்கிழமையும் புரொயிலர் குஞ்சுகள் 21 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதாஸ் பிரம்படிலேன், கொக்குவில். (2383)

### ஆங்கில புத்தகம்

அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க பரீட்சைக்குத் தோற்ற வீட்டில் இருந்தபடியே மிகச்சுலபமாக கற்கக் கூடிய முறையில் எழுதப்பட்ட புத்தகம் தான் Basic Grammar and Spoken Practical வாங்கியோர் பலராலும் பாராட்டப்பெற்றது: கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1958)

## பூநகரியில் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், செப். 19

பூநகரி கல்வி வலயத்துக்கு உட்பட்ட விஞ்ஞான ஆசிரியர்களுக்கான விஞ்ஞான சேவைக் கால பயிற்சி வகுப்பு பூநகரி மத்திய மகா வித்தியாலயத்தில் 28 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும். (76)

அமரர் மழவராயர் கந்தையா

# உயர்ந்த நோக்கங்களுடன் வாழ்ந்த பெருமகன்

## கல்லூரி நிறுவுனர் நினைவு விழாவில் உரை

யாழ்ப்பாணம், செப். 19

''அமரர் மழவராயர் கந்தையா உயர்ந்த நோக்கங்களுடனும் அபிலாஷைகளுடனும் வாழ்ந்த ஒரு பெருமகன்; அவர் எமது கல்லூரிக்கு விட்டுச்சென்ற அனைத்துச் சொத்துக்களையும் மேலும் நல்ல முறையில் பயனுடையதாக்க வேண்டும்''

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி நிறுவுனர் நினைவு நாள் விழாவுக்குத் தலைமை வகித்த கல்லூரிப் பிரதி அதிபர் திரு. வே. சந்திரசேகரம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தர் ஆலயத்தில் நடந்த விசேட பூசையுடன் நிறுவு நினைவு நாள் விழா ஆரம்பமானது. பூசைகளைத் தொடர்ந்து சிவன் தேவஸ்தானத்தில் இடம்பெற்ற தாபகர் நினைவு உரையரங்கு பகல் பன்னிரண்டு மணிக்கு ஆரம்பமாகியது.

கல்லூரி பிரதி அதிபர் திரு. வே. சந்திரசேகரம்பிள்ளை விழாவுக்குத் தலைமை வகித்தார்.

அமரர் மழவராயர் கந்தையா நினைவுப் பேருரை நிகழ்த்திய இளைப்பாறிய ஆசிரியர் பண்டிதர் ச. சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது.

### பெரியபுராண கலாசாரம்

யாழ்ப்பாணத்து கந்தபுராண கலாசாரப் பரம்பரையில் தோன்றிய அமரர் மழவராயர் தனது மகன் கந்தையா வள்ளல் மூலம் பெரியபுராண கலாசாரம் வாழ வளர வழி வகுத்தார். சோமஸ்கந்தக் கல்லூரியும், புத்தூர் தேவஸ்தானமும், அன்னசத்திரங்களையும் அமைத்து பெரியபுராண நாயன்மார் வழிநின்று பெரும் பணியாற்றினார். அறுபத்திமூன்று நாயன்மார் குருபூசையும் சிறப்புடன் நடக்க ஏற்பாடுகளைச் செய்த பெருவள்ளல் அவர் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. சிவானந்தமூர்த்தி பேசுகையில், புத்தூர் தேவஸ்தான வரலாற்றையும் சோமாஸ்கந்த கல்லூரி தோன்றிவளர்ந்த வரலாற்றையும் அமரர் மழவராயர் கந்தையாவின் பெரும் பணிகளையும் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் எடுத்து விளக்கினார்.

அமரர் மழவராயர் கந்தையா ஞாபகார்த்தச் சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அண்மையில் இளைப்பாறிய பிரதி அதிபர் திரு. த. சேனாதிராயர் சிறப்பு மலரை வெளியிட்டு வைத்தார். (அ- க)

## மாணவர் கல்வியில் பெற்றோர் அக்கறை காட்ட வேண்டும்

### கல்வி அதிகாரி உரை

யாழ்ப்பாணம், செப். 19

மாணவர்களின் கல்வியில் பெற்றோர்கள் அக்கறைகாட்ட வேண்டும். மாணவர்கள் பாடசாலைக்கு வராவிட்டால் கல்வித்திணைக்களத்தால் ஒன்றும் செய்ய முடியாது. இப்பாடசாலை மாணவர்களைப் பெற்றோர்கள் பாடசாலைக்கு அனுப்பியுள்ளது பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் யாழ். கோட்டக் கல்வி அபிவிருத்தி அதிகாரி திரு. நா. துரைசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலயத்தின் அதிபர் திரு. கா. கணேசதாசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது.

பாடசாலை இருப்பது மாணவர்களுக்காகவே. சில மாதங்களாக பாடசாலைக் கட்டடங்கள் யாவும் வெறிச்சோடிக் கிடக்கின்றன. இன்று பெற்றோர்கள் கலந்துரையாடி பிள்ளைகளை பாடசாலைக்கு வரச்செய்யவேண்டும். பாடசாலைக்கு வராவிட்டால் மாணவர்களுக்கு நஷ்டம் ஏற்படும் என்பதைப் பெற்றோர் உணரவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

ஆரம்ப பிரிவு அதிபர் திரு. க. திருநாவுக்கரசு நன்றி கூறினார். (க-3)

## இறையமும் சீவகாருண்யமும் மக்கள் மனங்களில் வளரவேண்டும்

### கல்வி அதிகாரி உரை

'இறை பயமும் ஜீவகாருண்யமும் இலங்கை மக்கள் உள்ளங்களில் வளர்ந்தால் இன்றைய பயங்கர ஒலங்களும் அழிவுகளும் மறையும். சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் நாட்டில் ஏற்படும்.'

பண்டத்தரிப்புகோட்ட நிர்வாக அதிகாரி திரு. க. மகேசன் கருத்தரங்கு ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

'இன்றைய அசம்பாவிதங்களும் அராஜகச் செயல்களும் நீங்க வழி என்ன' என்ற தலைப்பில் பண்டத்தரிப்பில் நடந்த கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில், இன்றைய அவலத்துக்குக் காரணமான வாழ்க்கை முறையை மாற்றினால் தான் எமக்கு விடிவு ஏற்படும்' என்று கூறினார்

திரு. நடராசா நாகராரா, திரு. கந்தசாமி, திரு. எஸ். சுந்தரலிங்கம் ஆகியோர் உட்பட பலர் கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள். (க-120)

## சிமெந்து தொழிற்சாலையில் மரம் நடும் விழா

தேசிய மரம் நடும் வாரத்தை முன்னிட்டு கடந்த 17 திகதி காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையில் நிர்வாக முகாமையாளர் திரு. வி. ரி. சிவலிங்கம் மரம் நடும் விழாவை ஆரம்பித்து வைத்தார்.

இவ்விழாவில் தொழிற்சாலையைச் சேர்ந்த சகல உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை நலன்புரி உத்தியோகத்தர் எஸ். வரதராசாவும் பங்கு பற்றினார். இவ்வாரம் முழுவதும் மர நடும் விழா நடைபெறும் என்று திரு. சிவலிங்கம் தெரிவித்தார். (க-10)

## மூலிகைப் பண்ணை

மானிப்பாய், செப். 19

மருந்துக்குத் தேவையான செடி கொடிகள் மூலிகைகளைக் கொண்ட மூலிகைப்பண்ணை ஒன்று இராமநாதன் கல்லூரியில் நிறுவப்படவுள்ளது.

இராமநாதன் தரும நிதியில் இருந்து இப்பண்ணைக்கான காணி பெறப்படும்.

பண்ணைக்கான பொருள்களையும், ஆட்களையும் விஞ்ஞான கல்வி அதிகாரியும், வெளிக்கள நிலையத் தலைவருமான திரு. எஸ். செல்லத்துரை கொடுத்துதவ இருப்பதாக அறிய வருகின்றது.

இராமநாதன் கல்லூரி அதிபர் தலைமையில் கல்லூரியைச் சேர்ந்த தாவரவியல் ஆசிரியர்கள் குழு இப்பண்ணைக்குப் பொறுப்பாக விளங்கும். (க- 90)

## தொழிலாளி - நிர்வாகம் பிணக்கு சுமுகமாக தீர்வு

பல வருடங்களாக மில்க்வைற் சோப் தொழிற்சாலையில் கடமையாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. க. திருநாவுக்கரசு என்னும் தொழிலாளியைப் போதிய முன்னறிவித்தலின்றி வேலை நீக்கம் செய்ததையும், ஊழியர் சேமலாபநிதி ஊழியர் நம்பிக்கைநிதி என்பவற்றை வழங்காததையும் எதிர்த்து ஈழப் பொதுத் தொழிலாளர் சங்கத்தில் முறையீடு செய்யப்பட்டது. ஈழத் தொழிற்சங்க சம்மேளனம் நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு தொடர்ச்சியாகப் பலதடவை பேச்சுவார்த்தை நடத்தியமையின் பெறுபேறாக சுமுகமான தீர்வு காணப்பட்டது.

ஈழத் தொழிற்சங்க சம்மேளனம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மில்க்வைற் தொழிற்சாலை நிர்வாகிகள் குறிப்பிட்ட தொழிலாளிக்கு அவர் கடமை புரிந்த காலத்திலிருந்து அவர் வேலைநீக்கம் செய்யப்பட்ட காலம்வரை வழங்கப்படவேண்டிய சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, சேவைக்கான பணம், திடீர் வேலைநீக்கம் செய்வதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாததை ஈழத் தொழிற்சங்க சம்மேளனம் சுட்டிக்காட்டி அவை சட்டப்படி அத்தொழிலாளிக்கு வழங்கப்படவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டது.

இதனை நிர்வாகம் ஏற்றுக்கொண்டு அவருக்கு ரூபா 28,696 வழங்கியதன் மூலம் இணக்கமான தீர்வு காணப்பட்டது.

இப்பேச்சுவார்த்தைகளில் ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் திரு. அ. இராஜலிங்கம், திரு. எஸ். சிவதாசன் ஆகியோரும், மில்க்வைற் சோப் தொழிற்சாலை சார்பில் அதன் பொது முகாமையாளர் திரு. எம். பாலசிங்கமும் கலந்துகொண்டனர்.

இப்படி அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டது.

## ப. நோ. கூ. ச. தேர்தல் விரைவில்

குருநகர், செப். 19

யாழ். மாநகர சபை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கான தேர்தல் விரைவில் நடைபெற இருப்பதாக ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேஷ பொதுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இம்மாதம் 21 ஆம் திகதியுடன் பொதுச் சபையின் ஆட்சிக் காலம் முடிவடைகிறது.

அடுத்த பொதுச் சபை ஒன்றைத் தெரிவு செய்வதற்கான கிளைச் சங்கங்களுக்கு இடையேயான தேர்தல் சங்க உறுப்பினர்களுக்கு இடையில் நடத்தப்பட்டு பொதுச் சபைக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். (51)

## சைவ மக்கள் வாழ்க்கையில் அறநெறி அவசியம் தேவை

### செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரை

மண்டைதீவு, செப். 19

''ஆலயங்களில் கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றன. இக் காலத்தில் சைவ மக்களாகிய நாம் எமது வாழ்க்கையிலும் புதிய அடி எடுத்து வைத்து அறநெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்பொழுது நாம் எம்மை தெய்[illegible] முடியும்.''

மண்டைதீவு சிறுப்பிட்டி அருள்மிகு முருகன் ஆலயத்தில் நடைபெற்ற மகா கும்பாபிஷேக வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன், சைவ சித்தாந்த சொரூபம் சைவப் புலவர் கணபதிப்பிள்ளை ஆகியோரும் உரை ஆற்றினர்கள். (க-88)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி சுசீலா தாமோதரப்பிள்ளை**

ஆண்டவன் படைப்பு: 27 — 01 — 1954 | ஆண்டவன் அழைப்பு: 13 — 10 — 1987

திதி - பஞ்சமி: 19 — 09 — 1989

அன்பிற்கு உருவளித்த
பண்பின் குலவிளக்கே
துன்பத்தில் எமையாழ்த்தி — வெகு
தூரம் சென்றனையோ
கண்ணிற்கு இமை போல உன்னை
காத்து வந்தோமே பகைவர்
மண்ணிற்கு இரையாக்க — நாம்
பார்த்து அழுதோமே
இரும்பாக்கி இதயத்தை — நாம்
இருத்த நினைத்தாலும்
கரும்பான உன் கனிமொழிகள் - எமை
காலமெலாம் வாட்டுதே

உமது ஆத்மா சாந்தி பெற தினமும்
இறைவனை இறைஞ்சுகின்றோம்

தந்தை, தாய், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனிமார், மக்கள், மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

சிவகுடில்
கே. கே. எஸ் வீதி,
கொக்குவில். [2360]

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**கோப்பாய் சு. சிவசிதம்பரம்**
(ஓய்வு பெற்ற அதிபர் அவர்கள்)

தோற்றம்: 22 - 04 - 1922 | மறைவு: 11 - 10 - 1987

திதி: 19.09.1989

நீண்ட துயில் கொண்டு
ஆண்டு இரண்டாயினும்
தூண்டா மணிச் சுடராய்
ஒளிர்கின்றீர் எம்முன்னே
கண்டைப் பிரிந்த
உந்தன் ஆத்மா சாந்தி பெற
வேண்டித் துதிக்கின்றோம்
ஆண்டவன் தன் திருப்பாதம்

''சிவ அகம்'',
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
நண்பர்கள், உறவினர்கள்.

(2384)

---

## ஓராண்டு நினைவஞ்சலியும் நினைவஞ்சலி அழைப்பும்



அமரர்

**திரு. சின்னத்தம்பி சின்னராசா அவர்கள்**
(சின்னகிளி)
(ஸ்ரீதரன் விளையாட்டுக் கழக உரிமையாளர்)

தாயின் மடியில்: 18. 04. 1937 | இறைவனடியில்: 30. 09. 1988

அப்பா, இறந்து போனீர்களா?
இல்லாமல் போய் விட்டீர்களா?
இல்லையில்லை! இறப்பு வாழ்க்கையின் முடிவில்லை
பிறிதோர் வாழ்க்கையின் தொடக்கம்
இறப்பின் மூலம் தான் ஒருவருடைய
பெறுமதி உணரப்படும் தந்தையே!
உங்கள் பெறுமதியை உயிருடன்
இருந்த பொழுது நன்குய் உணர்ந்தோம்
இப்பொழுது நன்குய் உருகிவிட்டோம்
கண்ணீர்க் கடலில் மிதந்து விட்டோம்
ஓராண்டு காலமாக உதிரவிட்ட கண்ணீரும்
இனி விடப் போகும் கண்ணீரும்
உங்களுக்குரிய அபிஷேக தீர்த்தங்கள் ஆகட்டும்
இந்தத் தீர்த்தக் கரைகளில்
உங்கள் திருமேனி பள்ளி கொள்ளட்டும்
தந்தையே! எங்களுக்காக வாழ்ந்தவரே;
இனியோ! நாங்கள் உங்களுக்காய்
அழுவது வாழ்க்கையாகிறது!

19-09-1989 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரிகைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:

169, அரசடி றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதர சகோதரியர்,
மைத்துனர், மைத்துனி,
மருமக்கள்.

(1950)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
இன்பிறந்தார் கண்ணேயும் இன்மை இனிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்:

பொருள்:
வறுமை என்பது, நல்ல குடியிற் பிறந்தவரிடத்தி லும் இழிவு தரும் சொல் பிறப்பதற்குக் காரணமான சோர்வை உண்டாக்கி விடும்:

உதயன்

இல. 328/2, நாவலர் வீதி, தொலைபேசி: 24000
யாழ்ப்பாணம். 23078
19 09 1989

## அக்கறை உண்மையானல்,....

நாட்டின் சமாதானத்தையும், அமைதியையும் இயல்பு நிலையையும் கொண்டு வருவதற்கு, ஜனதிபதி பிரேமதாச, என்ன விலையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார். இவ்வாறு அமைச்சர் தொண்டமான் கூறியிருக்கிறார். இதனை அறிந்து சொன்ன, அளந்து சொன்ன வாக்கியமாகக் கருத இடமுண்டு.

அனைத்துக்கட்சி மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் ஐந்து எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளை ஜனதிபதி சந்தித்துப் பேச்சு நடத்தினர்: அப்போது அரசியல் முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவது சம்பந்தமான அவர் சில கோரிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்கு ஜனதிபதி இணக்கம் தெரிவித்தார்.

அடுத்து அனைத்துக்கட்சி மாநாட்டில் அவர் ஆற்றிய உரையும், நாட்டில் அமைதியையும், இயல்பு நிலையையும் தோற்றுவிப்பதற்காக அரசியல் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு அவர் தயாராகவே இருக்கிறார் என்பதைப் பறைசாற்றியது.

மீண்டும் சமாதானத்தை நிலைநாட்ட, சம்பந்தப்பட்ட சகல பிரச்சினைகளும் இந்த மாநாட்டில் ஆராயப்படும். அரசியல், பொருளாதார, நிர்வாக முறைகளை சீரமைத்தல் என்பனவும் அந்தப் பிரச்சினைகளில் அடங்கும்: வர்க்க அல்லது சமூக அல்லது இன பேதமின்றி சகல மக்களுக்கும் சம உரிமைகளை உறுதிப்படுத்துவது குறித்தும் மாநாட்டில் ஆராயப்படும்: சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வை ஒழித்தலும் அவற்றில் அடங்கும்,

அனைத்துக் கட்சி மாநாட்டின் தொடக்க உரையில் ஜனதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்: எந்த விவகாரம் குறித்தும் பேசி இணக்க நிலை காண்பதற்கு அவர் தயாராக இருக்கிறார் என்பதையே அதுவும் பகர்ந்து நின்றது.

இப்போதைய நெருக்கடியைத் தணிப்பதற்கு ஒரு தற்காலிகத் தீர்வைக் காண்பது என்ற குறுகிய வட்டத்திற்குள் நிற்காமல், நாட்டின் அரசியல், பொருளாதார சமூகத் துறைகளில் ஒரு முழுமையான மாற்றத்தை, மறுசீரமைத்தலைச் செய்யும் விதத்தில் பரந்த நோக்குடன் விடயங்களை அணுக விருப்பம் உள்ளவராக இருக்கிறார் என்பதையும் அவரது பேச்சுச் செப்பியது.

நாட்டில் அமைதியை ஏற்படுத்த ஜே. வி. பியும், டி. பி. ஜே. வியும் சாதகமாக நடந்து கொண்டால் அரச படைகளின் இராணுவ நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படும்: வன்செயல் நிறுத்தம் பற்றிக் கண்காணிக்கக் குழு ஒன்றும் நிறுவப்படும்: — இவ்வாறு அரசாங்கம் ஞாயிற்றுக்கிழமை விடுத்த அறிக்கையில் தெரிவித்தது.

ஜே. வி. பியும், ஜனநாயக நீரோட்டத்துக்குப் புறத்தே உள்ள ஏனைய சக்திகளும் அனைத்துக் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டும்: அவை தமது எந்த யோசனையையும் மாநாட்டில் முன்வைக்கலாம்: அதற்கு முன்வந்தால் சம்பந்தப்பட்ட இயக்கங்களின் பிரதிநிதிகளுக்கு அரசு தகுந்த பாதுகாப்பு வழங்கும் — என்றும் அதே அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் சமாதானத்தையும், சகஜ நிலையையும் கொண்டு வருவதற்கு எந்தளவுக்கும் படியிறங்கி வருவதற்குத் தாம் தயார் என்பதை ஜனதிபதி சொல்லாமல் சொல்வதாக இவை அமைகின்றன:

ஆயினும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தனக்கு உண்மையான, இதய சுத்தியுடனன அக்கறை உண்டு என்பதை அரசாங்கமோ அல்லது ஜனதிபதியோ காத்திரமான செயல் மூலம் இன்னும் நிரூபித்துக் காட்டவில்லை. அரசியலின் வழமைப் பிரகாரம், வெறும் பேச்சிலும் எழுத்திலுமே எல்லாம் உள்ளன.

நாட்டில் அமைதி, சமாதானம், இயல்பு நிலை என்பனவற்றைக் கொண்டு வருவதில் அரசுக்குள்ள உண்மையான அக்கறையை நிரூபிக்க நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம், (இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தம்) ஒன்றை அறிவிக்கலாம். அரசாங்கப்படையினர் பழிவாங்கும் நடவடிக்கைகளில் இறங்கி, தீவிரவாதிகளையும் அவர்களின் ஆதரவாளர்களையும் அழிக்கிருர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இடம் வைக்காமல், ஆயுதப்படையினர் கட்டுப்பாட்டுடன் இருக்க நடவடிக்கை எடுக்கலாம்: எழுகுப்படை போன்ற அரசு சார்பான பயங்கரவாதக் குழுக்களைக் கலைக்கலாம்.

இவ்வாறு ஒரு காத்திரமான செயலைச் செய்து காட்டினுல் மட்டுமே அரசின் உண்மையான அக்கறையை ஜே. வி. பியும் புறத்தே நிற்கும் ஏனைய சக்திகளும் நம்ப வழி பிறக்கலாம். பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டுவது போலப் பாசாங்கு செய்ய முனைந்தால் அழுகையை, அலறலை எப்படி நிறுத்த முடியும்?

தென்னிலங்கையில் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை அரசு பிரகடனப்படுத்தினுல், வடக்கு - கிழக்கிலும் அவ்வாறு செய்யுமாறு இந்திய அமைதிப்படையை நிர்ப்பந்திக்கலாம்:

நாடு முழுவதிலும் இராணுவ நடவடிக்கைகள் நின்றுல், பிரச்சினைக்கான தீர்வை அமைதியான பின்னணியில் ஆற அமர யோசித்து முடிவு செய்வதற்கு அதிக வாய்ப்பு இருக்கும்:

## நிவாரணக் கொடுப்பனவு ஆரம்பம்

மட்டக்களப்பு செப் 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாகாணசபையின் பணிப்புரையின் பிரகாரம் இடைநிறுத்தப்பட்டிருந்த சுயதொழிலுக்கான நிவாரணம் ரூபா 4,000 கொடுப்பனவு பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன;

புதிய நடவடிக்கையின் பிரகாரம் விண்ணப்பபடிவங்கள் மாகாணசபை உறுப்பினர் இருவர் உட்பட ஐவர்கொண்ட குழுவினுல் மறுபரிசீலனை செய்யப்படுகின்றன; (க-31)

## திணைக்களம் கூட்டுத்தாபனமாகும்

கொழும்பு, செப் 19

தொலைத்தொடர்பு திணைக்களம் தனியார்மயப்படுத்தப்படமாட்டாது; அதற்குப் பதில் கூட்டுத்தாபனமாக மாற்றப்படவிருக்கிறது:

அரசு இத்தீர்மானத்தை எடுத்திருக்கிறது:

தொலைத்தொடர்புத்திணைக்களத்தில் தற்போது பணியாற்றும் ஊழியர்களை புதிய கூட்டுத்தாபனத்தில் சேர்ப்பது பற்றி பேச்சுக்கள் நடந்து வருவதாக திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்: (த-எ)

## ப. நோ. கூ. ச. மண்எண்ணெய் வழங்கவில்லை

நெடுந்தீவு, செப்: 19

மண்எண்ணெய் முத்திரைக்குரிய மாத மண்எண்ணெய் இதுவரை நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கம் பாவனையாளருக்கு வழங்கவில்லை:

மேற்படி சங்கத்தில் மண்எண்ணெய் இல்லாமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது:

இதே சமயம் தனியார் கடைகளில் ஒரு போத்தல் மண்எண்ணெய் 8ரூபா 50சதம் தொடக்கம் ரூபா பத்து வரை விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்: (க-111)

# ஒதுக்கிய நிதியை வருட இறுதிக்குள் பயன்படுத்தப் பணிப்பு

திருமலை செப்: 19

புனர் நிர்மாண வேலைகளுக்காக வடக்கு கிழக்கு மாகாண உள் துறை அமைச்சின் ஊடாக உள்ளூராட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை இவ்வருட இறுதிக்குள் பயன்படுத்த வேண்டும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் திரு. க. பரமேஸ்வரன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்:

யாழ். மாநகர சபைக்கு புனரமைப்புப் பணிகளுக்காக 2 கோடி ரூபா வழங்கப்பட்டது

அதில் 19 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவே செலவிடப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு அதில் 18 லட்சம் ரூபா செலவிடப்பட்டிருக்கிறது:

முல்லைத்தீவு நகரசபைக்கு ஒதுக்கப்பட்ட 80 லட்சம் ரூபாவும் செலவிடப்பட்டிருக்கிறது:

திருகோணமலை நகரசபைக்கு 70 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகளை ஆரம்பிக்க 80 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது;

வவுனியா நகரசபைக்கு 60 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது:

— இந்தவிவரங்கள் வடக்கு-கிழக்கு மாகாண அரசின் தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன: (க - 150)

### வாழ்க்கைச் செலவுப் புள்ளி:

## கணக்கிடும் முறையை மாற்றி அமைக்க யோசனை

கொழும்பு, செப்டம்பர் 19

வாழ்க்கைச் செலவுப்புள்ளியைக் கணக்கிடும் முறையை மாற்றி அமைப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்துவருகிறது.

தற்போது கடைப்பிடிக்கப்படும் கணக்கிடும் நடைமுறை 1953ஆம் ஆண்டு தொடக்கம் அமுலில் இருந்து வருகிறது:

இதுகுறித்து மாற்றம் தேவை என்று வற்புறுத்தி வந்துள்ளோம்; ஏழு ஆண்டுகளாக இதுபற்றி ஆய்வுகள் நடத்தப்பட்டன; தற்போதைய கணக்கிடும் முறை யதார்த்தரீதியானது அல்ல' — இப்படி புள்ளிவிபரத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் சொன்னர்: (இ-எ)

# கனேடிய அரசின் உதவியுடன் சிறுவர் பாடசாலை மண்டபம்

### தண்ணீரூற்றில் நிறுவப்படும்

யாழ்ப்பாணம், செப் 19

முல்லைத்தீவு மாவட்டம் தண்ணீரூற்றிலுள்ள இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்த பரிசுத்த மத்தியா ஆலய வளவில் சிறுவர் பாடசாலை மண்டபம் ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கு 2 லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்க இலங்கையிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயம் முன்வந்துள்ளது.

கடந்த காலங்களில் இப்பகுதியில் ஏற்பட்ட வன்செயல்களால் இப்பகுதி மக்கள் பெரும்பாதிப்பு அடைந்திருந்தனர்.

இலங்கைத் திருச்சபையின் யாழ்ப்பாண ஆச்சாரியன் அருட்கலாநிதி டொனல்ட் கனகரத்தினம் அடிகளாரும், சிறுவர் பாடசாலை வேலைத் திட்டக் குழுத் தலைவர் வைத்திய கலாநிதி ரி. டபிள்யூ. செயகுலராசாவும், யாழ். பரியோவான் கல்லூரி அதிபர் கலாநிதி ச. எஸ். தேவசகாயமும் கூட்டாகமேற்கொண்ட முயற்சியினுல் மேற்கண்ட தொகையை நன்கொடையாக வழங்க கனேடிய உயர்ஸ்தானிகராலயம் முன்வந்துள்ளது.

இப்பணத்தின் ஒரு பகுதி பரிசுத்த மத்தியா ஆலய திட்டமிடல் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் விரைவில் நடைபெறும்என்று தெரிவிக்கப்படுகிறது: (இ)

## மன்னரில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், செப் 19

எதிர்வரும் காலபோகம் 89/90 ஆம் ஆண்டில் 1000 நெற்செய்கை விவசாயிகளுக்கு தலா 2 ஏக்கர் வீதம் விதை நெல்லும், 520 விவசாயிகளுக்கு தலா ½ ஏக்கர் வீதம் மேட்டு நிலச் செய்கைக்கு உழுந்து, பாசிப்பயறு, கௌப்பி, நிலக்கடலை போன்ற விதைகளும் வட்டியில்லாக் கடன் அடிப்படையில் கொடுத்து உதவ மன்னர் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் முன்வந்துள்ளது.

ஏற்கனவே மேற்படி உதவித் திட்டத்தில் பங்குபற்ற 2000க்கு மேற்பட்ட விவசாயிகள் விண்ணப்பித்துள்ளனர்; 18 கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர்களிடமும், விவசாய போதனாசிரியர்களிடமும் இவை கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னர் மாவட்ட தலைமைப்பீட விவசாய போதனாசிரியரும், துயர்துடைப்பு சங்கச் செயலாளருமான திரு. ஸ்ரீசிலேயர் பீற்றர் மேற்படி விவசாய உதவித் திட்டம் சம்பந்தமாக கருத்து தெரிவிக்கையில், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவிகளுடன் மாதுமகசு விவசாய செயற்பாடு திட்டம் ஒன்றை வகுத்துள்ளதாகவும், விதைப் பொருள்களுக்கு இம்முறை இலங்கையில் பெரும் தட்டுப்பாடு நிலவிய போதிலும் வடக்கு - கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் கலாநிதி கே. விக்னராஜா, மன்னர் உதவி விவசாய பணிப்பாளர் திரு. கே. தட்சணமூர்த்தி போன்ரேர்களின் உதவியுடன் ஏனைய மாவட்டத்தில் இருந்து நேரகாலத்துடன் விதைப் பொருள்களை கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் கூறினர்: (க)

### அரிசி ஆலைகள் மூடப்பட்டதால்

## ஆயிரம் தொழிலாளர் வேலை இழந்தனர்

சேமமடு, செப்: 19

வவுனியாப் பிரதேசத்துக்கு மின்சாரம் தடைப்பட்டதால் சுமார் ஆயிரம் அரிசி ஆலைத் தொழிலாளர் வேலையின்றித் தவிக்கின்றனர்;

வவுனியாப் பிரதேசத்தில் 60க்கு மேற்பட்ட அரிசி ஆலைகள் இயங்குகின்றன;

மின்சாரம் தடைப்பட்டதால் பல ஆலைகள் மூடிக் கிடக்கின்றன;

இதனுல் இத்தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளார்கள்; [க- 37]

## பனைவள ஆராய்ச்சி நிலைய வேலைகள் யாவும் பூர்த்தி

குருநகர் செப்: 19

கைதடி பனைவள ஆராய்ச்சி நிலைய வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன;

தற்பொழுது இந்த நிலையத்தில் பனைநார் உற்பத்தி ஆய்வுப் பிரிவும் பனை வேலைகைப் பணிப் பிரிவும் [illegible] செயற்பட்டு வருகின்றன;

ஏறத்தாழ 40 [illegible] குடும்பங்களைச் சேர்ந்த இளம் யுவதிகள் மேற்படி ஆய்வு நிலையத்தில் பயிற்சி பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது;

பனைவள ஆய்வு நிலையம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் உதவி [illegible] குறிப்பிடத்தக்கது; (க-81)

## அனுதை சிறுவருக்கு சேமிப்புக் கணக்கு

மானிப்பாய், செப்: 19

உடுவில் கொத்தணி அதிபரும், இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபருமான திரு. எஸ். சோதிப்பெருமாள் மூன்று அநாதைச் சிறுவர்களுக்குத் தலா நூறுரூபா வீதம் இலங்கை வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து வழங்கியுள்ளார்;

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் திருவிழாவின் போது இலங்கை வங்கியின் ஐம்பதாவது நிறைவு விழாவை ஒட்டி ஆரம்பித்த சிறுவர் சேமிப்பு நிதிக் கணக்கிலேயே அவர் இவ்வாறு வைப்புச் செய்துள்ளார்;

காலம் சென்ற தமது மனைவியின் ஞாபகார்த்தமாக அவர் இதனை வழங்கியுள்ளார்; (க - 90)

## பொன்விழா

யாழ்ப்பாணம், செப்: 19

லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி அதிபர் ஏ. வி. ராசரத்தினம் அவர்களின் பொன்விழா இம்மாதம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8: 30 மணிக்கு யாழ்ப்பாணம் பாம்கொட் ஹோட்டலில் நடைபெறும்; (ச)

## சனசமூக நிலையங்களின் விவரம் திரட்டப்படுகிறது

கொழும்புத்துறை, செப் 19

யாழ் மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்கள் சம்பந்தமான விவரங்கள் யாழ் உள்ளூராட்சித் திணைக்களத்தினுல் திரட்டப்படுகின்றன;

வடக்கு - கிழக்கு மாகாண அரசின் உள்ளூராட்சி ஆணையாளர் விடுத்த பணிப்பை அடுத்து இவ்விவரங்கள் திரட்டப்படுகின்றன;

ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாசங்கள் ஊடாக இவ்விவரங்களைத் திரட்டி அனுப்பி வைக்குமாறு யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்; (இ-30)

## ஜனசக்தி திட்டத்துக்கு ஏழரை லட்சம்

முல்லைத்தீவு, செப்: 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனசக்தித் திட்டத்தை அமுலாக்கத் தெரிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு ஜனசக்தித் திட்டத்தை அமுலாக்க ஏழரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது;

எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஜனசக்திப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக முல்லை உதவி அரசாங்க அதிபர் திரு. வி. கந்தசாமி தெரிவித்தார்; (இ - 93)

## விண்ணப்பங்கள்

மட்டக்களப்பு செப் 19

கூட்டுறவு திணைக்களத்தால் கூட்டுறவுப் பரிசோதகர்கள் நியமனம் தொடர்பாக கோரப்பட்ட விண்ணப்பங்கள் மாகாண சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன;

மாகாணசபை மூலம் மேற்படி நியமனம் வழங்கப்படும் (க-21)

## பயிற்சி வகுப்பு

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த இருபது கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கும் பன்னிரண்டு விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களின் கடமைகள் சம்பந்தமான பயிற்சி வகுப்பு நடைபெற்று முடிவடைந்தது;

இந்தப் பயிற்சி வகுப்புக்கு குமிழமுனை கமநலசேவை நிலையத்திற்குப் பொறுப்பான பெரும்பாக உத்தியோகத்தர் திரு. கே. தர்மலிங்கம் இணைப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றினர்; [illegible]

## திருமுகம்

### யாழ். நூலக புனரமைப்பு நிதி

20- 8- 1989 உதயனில் வெளிவந்த யாழ். நூலகம் தொடர்பான செய்தியை ஒட்டி இதனை எழுதுகின்றேன்:

1981 யூன் முதல் நாளில் எரிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்துக்கு முன்னுள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னன்டோ தலைமையில் அரசு நியமித்திருந்த தனி நபர் விசாரணைக் குழு வழங்கப்பட வேண்டிய நட்ட ஈட்டுத் தொகையாகச் சிபார்சு செய்திருந்த ஒரு கோடி ரூபாவே வழங்கப்படாதுள்ள பணமாகும்;

யாழ். மாநகர நிர்வாகத்தினர் இந்த நட்ட ஈட்டுத் தொகையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

த. இன்பரக
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்;

### நிவாரண உதவி- ஒரு ஆலோசனை

கடந்தகால அசம்பாவிதங்களினுல் பாதிக்கப்பட்ட கட்டடங்களைப் புனரமைப்பதற்கு வெளிநாடுகளும் மற்றும் ஸ்தாபனங்களும் அரசுப் பணம் வழங்குவது இன்றைய நிலையில் உண்மையில் பயனுள்ளதா?

இதற்குப் பதிலாக குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கும் பெற்றோர்களுக்கும் வாழ வழி வகுத்துக்கொடுப்பது சாலச் சிறந்தது;

சேதப்பட்ட கட்டடங்களுக்குத் திரும்ப எதுவும் நடக்காது என்பதை உறுதி செய்ய முடியுமானுல் அவற்றைத் திருத்துவதற்கு முன்னுரிமை கொடுக்கலாம்.ஆனுல் அந்த உத்தரவாதம் தான் இல்லையே!

ஆகவே தான் குடும்பத் தலைவனை இழந்த குடும்பங்களுக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்;

சி. சுரேஷ்
வியாபாரிமூலை;

### சண்டிலிப்பாய் மக்களுககு இல்லையா?

87 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி முதல சண்டிலிப்பாய் மக்கள் வீடு வாசல் இழந்து தவிக்கின்றனர்; எங்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கிராம சேவகரிடம் நாம் எடுத்துக் கூறியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை: சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து எமது கண்ணீரைத் துடைக்க உதவி செய்வார்களா?

ஸ்ரீகாந்தன்
(செயலாளர், கலைவாணி இந்து இளைஞர்சங்கம்)
மற்றும் 8 பேர்;
சண்டிலிப்பாய்;

## கண்டதும் கேட்டதும்

யாழ். போதனு வைத்தியசாலையில் தற்போது திடீர் மாற்றம் காணப்படுகிறது.

வார்ட்டுகள் பளிச்சென்று இருக்கின்றன; ஊழியர்கள் சுறுசுறுப்பாக கடமைகளில் ஈடுபடுகிருர்கள்.

சகல கடமைகளும் சரியான நேரத்துக்குச் செய்து முடிக்கப்படுகின்றன, நோயாளிகளுக்கும் ஊழியர்களுக்கும் இடையில் புதிய உறவு ஏற்பட்டுள்ளது. இன்னும் எத்தனை எத்தனையோ புதிய நடைமுறைகள்; தடபுடல்கள்,

ஏன் இந்த மாற்றம்?

சனிக்கிழமை இரவு அங்கு திடீர் சோதனை ஒன்று இடம்பெற்றதாம்; இப்படியான திடீர் சோதனைகள் அங்கு தொடரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது;

— செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**VACANCIES**

WANTED IMMEDIATELY

For Green Memorial Hospital, Manipay.

M.B.B.S Doctors and R.M.Ps

SALARY: Negotiable

APPLY To: **Medical Superintendent, Green Memorial Hospital, Manipay.**

(C/8679)


# தும்பு உற்பத்திப் பொருள்களுக்கு தெற்கை எதிர்பார்க்கக் கூடாது

## கட்டடக் கையளிப்பு வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், செப்: 19

வடபகுதி மக்கள் தும்புக் கட்டைக்கும், தும்புக் கயிற்றுக்கும் தென்னிலங்கையை மட்டும் எதிர்பார்த்திருக்கக் கூடாது;

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் ஒன்றை தும்புத் தொழிற்சாலையை உருவாக்குவதற்கென யாழ்; சிறுகைத்தொழில் உதவிப் பணிப்பாளர் திரு: சி: ஆர்; வேலாயுதபிள்ளையிடம் வைபவ ரீதியாக கையளித்து உரையாற்றும்பொழுது மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு: ஸ்ரீ பாஸ்கரன் மேற்கண்டவாறு கூறினார்:

திரு; வெ: தனராசாவின் வரவேற்புரையுடனும் நடைபெற்ற இவ்வைபவத்தில் வலி: வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு வை: இராசையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்;

ஸ்ரீ பாஸ்கரன் தொடர்ந்து உரையாற்றுகையில், 1957ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் பேசும் வாலிப முன்னணியின் தலைவராக இருந்த காலம் தொட்டே பிறரை நம்பி வாழாது எமக்குத் தேவையான பொருள்களை நாமே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கம்தான் இன்று தும்புத் தொழிற்சாலை உருவாகுவதற்குக் காரணமாக இருந்தது என்றார்:

வலி; வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு; வை; இராசையா உரையாற்றும் பொழுது, இலங்கையிலேயே சிறந்த ஒரு கிராம அபிவிருத்திச் சங்கமாக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் விளங்குவது எனக்கு பெருமையைத் தருகின்றது: திரு: ஸ்ரீ பாஸ்கரவின் சேவை பரவலாக மக்களைச் சென்றடைய வேண்டும்; சுழிபுரம் பகுதியில் தொழுநோயாளர்களுக்கு மலகூடங்கள் அமைத்துக் கொடுத்தது குறிப்பிடத்தக்கதாகும் என்றார்;

உதவி சிறுகைத்தொழில் பணிப்பாளர் சா ர பா க திருமதி ஸ்ரீபதி உரையாற்றும் பொழுது, வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கிறது; இந்த நிலையில் பெண்களும் ஒரு தொகையைச் சம்பாதித்தால் அன்றி குடும்பம் நடத்துவதில் கஷ்டம் ஏற்படும்-

இதற்கு உதவியாக அமைந்தது இந்த நிலையம் என்றார்; (இ- 10)

## இளைஞர் கழகம்

புதுக்குடியிருப்பு; செப். 19

புதுக்குடியிருப்பு புனித வளன் ஆலயத்தைச் சேர்ந்த இளைஞர்களைக் கொண்ட 'சென். ஜோசப் இளைஞர் கழகம்' பங்குத் தந்தை வண: ஜோசப்தாஸ் ஜெபரத்தினம் அடிகளின் வழிநடத்தலில் பல சமூக சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது;

இப்பகுதியில் ஒரு குடிசைக் கைத்தொழில் போன்று பெருகிவிட்ட மனித உயர் கொல்லியாகிய கசிப்பு உற்பத்தியை முற்றாக அழிக்கும் முயற்சியில் இக்கழகம் பெரும் வெற்றியும் கண்டு வருகின்றது: (க-126)

## செல்வச்சந்நிதி ஆலயத்தில் தவறிய அடையாளக் கார்ட் விபரம்

யாழ்ப்பாணம் செப் 19

சரித்திரப் பிரசித்தி பெற்ற செல்வச்சந்நிதி ஆலயத் திருவிழாவுக்கு வந்த அடியார்களினால் தவறவிடப்பட்ட அடையாளக் கார்ட்டுக்கள் செல்வச்சந்நிதி ஆலயக்கலா மன்றத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன;

கலாமன்றத்தினரிடம் நேரடியாகச் சென்று அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டிருக்கின்றது.

அவற்றின் விபரம் வருமாறு

★ கனகராசா கந்தசாமி, சுதுமலை வடக்கு; இல. 502090402 V

★ மீனாட்சிப்பிள்ளை சுப்பிரமணியம்' நல்லூர் குறுக்கு வீதி, இல; 227320621 V

★ நேசமலர் கந்தசாமி, சுதுமலை வடக்கு: இல; 257470105 V

★ செல்வராசா வள்ளிப்பிள்ளை, கரவெட்டி மேற்கு, இல; 507894518 V

★ புஷ்பராணி கணபதிப்பிள்ளை, பலாலி, மயிலிட்டி; இல. 546012930X

★ அரியநாயகி இளையதம்பி சுழிபுரம் மேற்கு; இல: 165490142 V

தற்காலிக அடையாள அட்டைகள் விவரம்:

★ எம்; ஜெயக்குமார்; தம்பாலை;

★ த; தேவி, புன்னாலைக் கட்டுவன்:

★ ரி. செல்வமலர், கரணவாய் மத்தி;

நெஷனல் செக்கிரட்டி, சேவிஸ், அடையாள அட்டை:

★ கே; ஸ்ரீகாந்தா, கிளிநொச்சி.

வேலைத்தல அடையாள அட்டை ஒன்று:

★ ஆர்; ரவீந்திரலிங்கம் இல. 010308 (இ-51)

## பொது நூலாகிய திருக்குறள் சமய சார்பு இல்லாதது

### அறிவொளி மன்ற விழாவில் உரை

யாழ்ப்பாணம், செப்; 19

'திருக்குறள் ஒரு பொது நூல். அது சமய, இசைச் சார்பற்றது; திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர்; நாம் பின்பற்றக்கூடிய பல அறிவுரைகளைக் கொண்டது திருக்குறள்.'

நாவற்குழி அறிவொளி மன்றத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய கலாநிதி திரு. வெ. திருஞானசம்பந்தர் மேற்கண்டவாறு கூறினார்: விழா மேற்படி மன்றத் தலைவர் திரு: பொ. சுப்பையா ஜே. பி. தலைமையில் நடைபெற்றது.

மன்றத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி தெரிந்தெடுத்த திருக்குறள்களைக் கொண்ட 'அறிவொளி' என்ற கைநூல் வெளியிடப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

ஆண்டு விழாவின்போது தனி மனிதன் முன்னேறுவதற்கு செல்வம் அவசியமா அல்லது கல்வி அவசியமா என்ற பொருள் பற்றிய பட்டிமன்றம் திரு. ந. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது: திருவாளர்கள் பி: முத்துலிங்கம், எஸ். ரகுபதி, செ; பாலச்சந்திரன், து. பாலசுந்தரம், க; சந்திரசேகரம், இ. சொக்கலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

செயலாளர் திரு: ஆ; நடராசா விழாவின்போது மன்றத்தின் ஆண்டறிக்கையை வாசித்தார்; (க)

## அதிபர்கள் கூட்டம்

உடுவில் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களின் கூட்டம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை 20ஆம் திகதி புதன்கிழமை 9.30 மணிக்கு நடைபெறும்; (இ-90)

## இறைச்சி வியாபாரிகளின் தீர்மானம்

குருநகர், செப்; 19

"யாழ். பாநகர சபை எல்லைக்குள் இயங்கிவந்த 30மினி இறைச்சிக் கடைகள் பல் துறை முக்கியஸ்தர்களது தலையீட்டால் நீக்கப்பட்டுள்ளதை அடுத்து பாதிக்கப்பட்டுள்ள மினி இறைச்சிக்கடை வியாபாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் வேலை வாய்ப்பை யாழ். மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கம் வழங்க வேண்டும்"

யாழ் மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கக் கூட்டம் உப- தலைவர் ஜனாப்: அ. அப்துல் சலாம் தலைமையில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன் பிரகாரம் சகல 'மினி' இறைச்சிக்கடை வியாபாரிகளும், ஊழியர்களும் சங்கச் செயலாளர் திரு: ... இருஷ்ணருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்; (க-51)


180 ஆம் நாள் நினைவஞ்சலி

[6ஆம் மாத நினைவஞ்சலி]



அமரர் உயர்திரு

பொன்னையா இராஜேந்திரன்

[இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் R. D. H. S. Office Jaffna]

தோற்றம்: 29 — 05 — 1927

மறைவு: 19 — 03 — 1989

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பின் ஊற்றாய், பாசத்தின் உறைவிடமாய், எம்மிடையே கலகலத்து சிரித்த எம் ஆருயிர் தெய்வமே! உங்களைப் பிரிந்து மாதம் 6 சென்றாலும் எங்கள் மனதைவிட்டு அகலாத தெய்வமே இந்நாளில் அல்ல எந்நாளுமே உம்மை மறவோம்!

உம் ஆத்ம சாந்திக்கு இறைவனை பிரார்த்திக்கின்றோம்

உம் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
மருமகள், பேரப்பிள்ளைகள்:

"வில்வனை"
புலோலி மேற்கு,
பருத்தித்துறை

[1936]



2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்வன்

சத்தியதாசன் லானல்தாசன்

மலர்வு: 14 — 12 — 1967

உதிர்வு: 12 — 10 — 1987

திதி: 19 — 09 — 1989

இன்றுடன் ஈராண்டு முடிந்ததையா
ஒருவராலும் உன் நினைவு மறக்க முடியுதில்லையே
நூறாண்டு முடிந்தாலும்
நொடிப்பொழுதும் உம்மை மறவோமையா

"உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா: அண்ணன்மார், அக்கா,
அண்ணி, மைத்துனர், பெருமக்கள் மற்றும்
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்:

31/15, தலையாளி,
சபாபதி வீதி,
யாழ்ப்பாணம்;

[2175]



31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

ஆனந்தரதி திருநாவுக்கரசு

தோற்றம்: 10 — 02 — 1934

மறைவு: 20 — 08 — 1989

நேசமும் காட்டி எம் மீது
பாசமும் காட்டி விட்டு
மோசம் செய்து நீ போயிவிட்டாயோ?
ஈசன் பாதம் நாடிச் சென்றாயோ?
எம்மையெல்லாம் பரிதவிக்க விட்டு விட்டு
சென்றாயோ?

பிரிவால் துயருறும்;
... சகோதரர், உற்றார், உறவினர்கள்;
...

[2100]



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பாவிலுப்பிள்ளை டோமினிக் மரியநாயகம்

தோற்றம்: 04 — 08 — 1915

மறைவு: 20 — 09 — 1988

ஓராண்டு கழிந்ததப்பா அழுது
ஒளிமுகத்தைக் காணாது இருள் வீட்டில்
நீராண்ட கண்களுடன் நெஞ்சம் வெந்து
நிலைகுலைந்து வாழுகின்றோம் அப்பா உங்கள்
பேராண்ட குடும்பமெல்லாம் சோகம் விஞ்சிப்
பெரு நெருப்பின் பயிராக வாடுதிங்கே
பாராண்டு கருணை தரும் பரமன் வீட்டில்
பரிமளமாய் வாழ்ந்தெமக்காய் வேண்டுவீரே

இவரது ஆத்ம சாந்திக்காக 20-09-89 காலை 10.00 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்;

இவரது பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புனித அந்தோனியார் வீதி,
பண்டத்தரிப்பு:

[2344]



31ஆம் நாள் நினைவஞ்சலி



● சி. கலைஜீவன் (வண்ணன்) ●

(கிளிநொச்சி)

மலர்வு: 1964...

உதிர்வு: 19- 08- 1989

எங்கள் மண்ணில் பட்டுப் பதிந்த- உங்கள்
பொன்மலர்ப் பாதங்களை - நாங்கள்
தொட்டுப் பூஜிக்கின்றோம்;

—புதுக்குடியிருப்புப் பிரதேசமக்கள்.

புதுக்குடியிருப்பு,
19- 09- 1989

(2380)



2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



● சமீஸ்குமார் செல்வராசா ●

தோற்றம்: 27- 10- 1979

மறைவு: 30- -08 1987

திதி: 19- 09- 1989

இரண்டாண்டு கழிந்தாலும்
எம் இராசாவே
உன் அன்புருவம்
எம் நெஞ்சங்களில்
உயிரோடு உலாவுதடா!

பெற்றோர், அண்ணன்மார்,
தங்கை, பாலன்மாமா.

212' மருதடி வீதி,
யாழ்ப்பாணம்;

(2196)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

● ஏப்ரலில் கொண்டுவரப்பட்ட

# ராணுவச் சட்டத்தைநீக்கமுடியாது; சீன அரசு தலைமைப்பீடம் அறிவிப்பு!

பீகிங், செப்; 18

கடந்த ஜூன் மாதம் கொண்டு வரப்பட்ட இராணுவச் சட்டத்தை நீக்கப்போவதில்லை என்று சீனா நேற்று அறிவித்தது;

நாட்டில் ஸ்திரமான ஆட்சி நிலவ ராணுவச் சட்டம் அவசியம் என்று சீன அரசு நேற்று அறிக்கை ஒன்றில் தெரிவித்தது;

கூடுதல் ஜனநாயக உரிமைகள் கோரி கடந்த ஏப்ரல் முதல் மாணவர் நடாத்திவந்த கிளர்ச்சியை அடக்க சீன அரசு ராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தது தெரிந்ததே;

மாணவர் கிளர்ச்சியை அடக்க சீனமக்கள் இராணுவம் எடுத்த நடவடிக்கையின் போது ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்;

பல நாடுகள் சீனாவின் இச் செயலைக் கண்டித்தன; பொருளாதார உதவிகளைச் சீனாவுக்கு வழங்குவதையும் அவை நிறுத்தி விட்டன என்பது குறிப்பிடத்தக்கது;

இதனிடையில் — சீனப் புரட்சியின் 40 ஆவது ஆண்டு நிறைவைப் பெரிய அளவில் கொண்டாட பீகிங் தலைவர்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள். (எ)

● செப்டம்பர் 27 முதல்

## 'போடி'யில் மூன்றுநாள் விஜயம் ஜெயலலிதா மேற்கொள்வார்!

சென்னை, செப் 18

போடி நாயக்கனூர் தொகுதியில் மூன்று நாள் சுற்றுப் பயணம் செய்யப்போவதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் தொகுதி எம்.எல்.ஏ.யுமான செல்வி ஜெயலலிதா அறிவித்திருக்கிறார்;

சென்னையில் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார்;

எம் எல் ஏ ஆகத் தெரிவு செய்யப்பட்டபின்னர் செல்வி ஜெயலலிதா 'போடி' செல்லவிருப்பது இதுவே முதல் தடவையாகும்;

இதனிடையில் — அ. தி. மு. க; வைச் சேர்ந்தவர்கள் யாரும் அறிக்கை விடுவதையோ மேடையில் பேசுவதையோ நான் தடுக்கவில்லை' —என்றும் ஜெயலலிதா சொன்னார்; (எ)

## 48 பேர் பலி!

பீகிங், செப்: 18

சீனாவில் பெருமழையுடன் சேர்ந்து வீசிய புயலினால் 48 பேர் மரணமானார்கள்; 26 பேர் காயமுற்றனர்;

சுமார் பத்து மணி நேரமாக வீசிய இக்கடும் புயல் 27 வருடங்களின் பின்னர் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது; (எ)

● கொலம்பியாவில்

## அமெரிக்க தூதரகம் மீது ரொக்கெட் தாக்குதல்

கொலம்பியா தலைநகரில் உள்ள அமெரிக்கத் தூதரகக் கட்டடம் மீது போதைக் கடத்தல்காரர்கள் நேற்று ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தினர்;

கட்டடத்திற்குச் சேதமேற்பட்டது; ஆட்சேதம் ஏற்படவில்லை:

இதேவேளை — குண்டுத் தாக்குதல் காரணமாக இரண்டு வங்கிகள் சேதமடைந்தன; ஒருவர் காயமடைந்தார்; (எ)

## பெரியார் பிறந்த நாள்

சென்னை, செப். 18

பகுத்தறிவுத் தலைவர் ஈ. வே. ரா. பெரியாரின் 111 ஆவது பிறந்த தினம் நேற்று தமிழகத்தின் பல பகுதிகளிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

பெரியாரின் உருவச்சிலைக்கு தமிழக சட்டசபை சபாநாயகர் டாக்டர் தமிழ்க்குடிமகன் திராவிடக்கழகத் தலைவர் திரு. கி. வீரமணி மற்றும் அ. தி. மு. க. பிரதிநிதிகள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்; (அ)

## அல்ஜீரியாவில் அரசியல் சீர்திருத்த நடவடிக்கை!

அல்ஜியர்ஸ், செப். 18

அல்ஜீரியாவில் அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை விரைவுபடுத்தப் போவதாக அல்ஜீரிய ஜனாதிபதி நேற்று அறிவித்தார்;

இது தொடர்பாகப் பொது மக்களின் அபிப்பிராயத்தைக் கோரப் போவதாகவும் ஜனாதிபதி அறிவித்தார்;

எதிர்க்கட்சிகளின் ஆலோசனையை அரசு பெறமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது;

ஒரு கட்சி ஆட்சி முறையை நீக்கி விட்டுப் பல கட்சி அரசு முறையைக் கொண்டு வரப் போவதாக ஜனாதிபதி கடந்த ஆண்டு அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## லெபனனில் அமைதி திரும்ப அரபு லீக் யோசனைகள்

பேரூட் செப் 18

லெபனான் மோதலுக்கு முடிவு கட்டும்முகமாக அரபு லீக் தயாரித்துள்ள சமரச யோசனைகள் பற்றி பேச்சுக்கள் நடத்த விசேட தூதர் ஒருவரை லீக் தலைமைப்பீடம் பேரூட்டுக்கு நேற்று அனுப்பி வைத்தது;

பேரூட்போய்ச் சேர்ந்த தூதரை லெபனான் கிறிஸ்தவ பிரிவுத் தலைவர் ஜெனரல் அவுன் வரவேற்றார்;

அரபு லீக்கின் அமைதித் திட்டம் பற்றிஜெனரல் அவுன் டெலிவிஷனில் தோன்றி பேசினார்;

அப்போது அரபு லீக் அமைதித்திட்டத்தை நிராகரிப்பதாகவோ ஏற்பதாகவோ அவர் சொல்லவில்லை;

யுத்தநிறுத்தம் ஆயுதங்களை விநியோகம் நிறுத்தம் சிறிய படைகள் விலகல் ஆகிய உடனடியாக இடம்பெற வேண்டும் என்று ஜெனரல் அவுன் சொன்னார்; (எ)

## பெனாஸிர் உத்தரவு

இஸ்லாமாபாத், செப்; 18

உள்ளூர், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பாகிஸ்தான் பெண்களும் பங்குபற்ற அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

அதிபர் ஸியா ஆட்சியின் போது பெண்கள் கலந்து கொள்ளத் தடைவிதிக்கப்பட்டிருந்தது;

இத்தடையை பெனாஸிர் அரசு நேற்று நீக்கி விட்டது; (எ)

## புற்று நோய் குணமாக தேள் விஷத்தில் மருந்து

வாவனா, செப். 18

மிகக் கொடிய வியாதியான புற்று நோய்க்கு தேள் விஷம் நல்ல மருந்து என டாக்டர்கள் கண்டுபிடித்துள்ளனர்; புற்று நோய் பரவுவதை தடுப்பதோடு மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்ட பகுதிகள் மீண்டும் வளர்ச்சியடையவும் உதவுவதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது;

பிரபல உயிரியல் நிபுணர் மிசேல் பார்டியர் தலைமையில் உயிரியல் மற்றும் மருத்துவ நிபுணர்கள் கடந்த 5 ஆண்டுகள் மிருகங்களிடம் சோதனை செய்தனர்; முடிவில் புற்று நோய்க்கு தேள் விஷம் நல்ல மருந்து என கண்டு பிடித்தனர்;

புற்று நோயால் பாதிக்கப்பட்ட 14 நாய்களுக்கு தேள் விஷத்தை கொடுத்து சோதித்தனர்; அந்த நாய்களின் ஆயுள் ஒரு ஆண்டு வரை நீடித்தது; 350 எலிகளுக்கு சோதனை செய்து பார்த்ததில் 80 சதவீத எலிகளுக்கு நோய் பரவுவது நின்றது;

இத் தகவலை பார்டியர் தெரிவித்தார்; (எ 4)

## பெண் குழந்தைகளை விரும்பும் அமெரிக்கர்!

வாஷிங்டன் செப் 18

அமெரிக்கர்கள் பெண்குழந்தைகளை பெற்று கொள்ளவே அதிகம் விரும்புகின்றனர் என ஓர் ஆய்வு கூறுகின்றது;

அமெரிக்க தம்பதிகளிடையே சமீபத்தில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது; அதில் தெரியவந்துள்ளதாவது;

அமெரிக்காவில் முதல் முதலாக ஆண் குழந்தை பெற்றுக் கொள்ளும் தம்பதிகள் இரண்டாவதாக மீண்டும் குழந்தை பெற்றுக் கொள்ள அவசரப்படுகின்றனர் பெண் குழந்தை ஆசை தான் இதற்கு காரணம்; (எ)

## உலகின் பலம்வாய்ந்த மனிதன்

லண்டன்

உலகின் பலம்வாய்ந்த மனிதராக பிரிட்டன் ஜாமி ரீவ்ஸ் என்பவர் அறிவிக்கப்பட்டுள்ளார்;

ரீவ்சுக்கு வயசு 27; எடை 149 கிலோ;

ஸ்பெயின் நாட்டிலுள்ள செபாஸ்டின் நகரில் நடந்த பலசாலிப்போட்டியில் 8பேர் கலந்துகொண்டனர்;

பெரிய டிரக்குகளை இழுத்து ரீவ்ஸ் போட்டியில் வெற்றி பெற்றார் டச்சு நாட்டைச் சேர்ந்த ஒல்டர்ஸ் இரண்டாவது இடத்தைப்பெற்றார். (எ)

## நீண்ட நாள் வாழ்வது எப்படி?

லண்டன், செப்; 18

ஜான் இவான்ஸ் என்பவர் கடந்தவாரம் தனது 112வது பிறந்தநாளைக் கொண்டாடினார்; உலகின் மிக வயதான மனிதர் என்ற பட்டம் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது;

இப்போதும் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும் இவானிடம் 'நீங்கள் உயிர் வாழும் ரகசியம் என்ன,' எனக்கேட்ட போது,

சிகரெட், மது, சூதாட்டம், பெண்களிடம் தொடர்பு போன்ற கெட்ட பழக்கங்களை தவிர்த்ததனால் தான் என்றார்; (எ)

## செர்னோபில் கதிர்வீச்சு பாதிப்பு நீடிக்கிறது; ஆயிரக்கணக்கில் மக்கள் வெளியேற்றம்!

மாஸ்கோ, செப். 18

ரஷ்யாவின் செர்னோபில் அணுமின் நிலையத்தில் 1986 ஆம் ஆண்டு ஏற்பட்ட விபத்தினால் கதிர்வீச்சு காரணமாக பலவித நோய்கள் தோன்றியுள்ளன;

இதனால் 18 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 8000 பேர் வேறு இடங்களுக்குக் குடிபெயரத் தயாராக இருக்கிறார்கள். இத்தகவலை ரஷ்ய செய்தி ஏஜென்ஸியான டாஸ் தெரிவித்துள்ளது;

அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் 10 மடங்கு கதிர்வீச்சு தமது இல்லத்தில் காணப்படுவதாகவும் தங்கள் பிராந்தியத்தில் கடந்த 3 ஆண்டுகளில் நோய் விகிதம் இரட்டிப்பாகியுள்ளதாகவும் உள்ளூர் வாசி ஒருவர் கூறியதாக பிரியான்ஸ்க் நகரிலிருந்து வந்த தகவல் ஒன்று கூறுகிறது;

இந்த நகரம் செர்னோபில் அணுமின் நிலையத்திலிருந்து சுமார் 350 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது; பிரியான்ஸ்க் நகரிலிருந்து யாரும் வெளியேறவில்லை என்றபோதிலும் மேற்கண்ட 18 கிராமங்களும் அந்தப் பிராந்தியத்தில் உள்ளன;

எத்தகைய நோய்கள் தோன்றியுள்ளன என்பது பற்றி "டாஸ்" எதுவும் கூறவில்லை;

கதிர்வீச்சைப் போக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டால், தங்கள் பகுதிகளில் மக்கள் வாழலாம் என்று கிராமவாசிகளுக்கு 1986ஆம் ஆண்டு ரஷ்ய விஞ்ஞானிகள் உறுதி அளித்தனர்; ஆனால் அவர்கள் கூறியது சரியல்ல அனுபவம் உணர்த்திவிட்டது;

கிராமங்களை விட்டு வெளியேற மக்கள் தயாராக இருக்கிறார்கள்; அரசின் அனுமதிக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள் என்றும் "டாஸ்" குறிப்பிட்டுள்ளது;

மேற்கண்ட கிராமவாசிகள் தங்கள் கிராமங்களில் கால்நடைகளை வளர்ப்பதில்லை அவற்றின் மாமிசம், பால் மூலம் கதிரியக்கம் பாதிக்கலாம் என்ற பயமே இதற்குக் காரணம்;

செர்னோபில் அணுமின் திட்டத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து மக்களை மேலும் அப்புறப்படுத்துவது பற்றி பைலோரஷ்ய குடியரசின் அரசுக்கும் விஞ்ஞானிகளுக்கும் சர்ச்சை ஏற்பட்டதையடுத்து மேற்கண்ட தகவல் வெளியாகியுள்ளது;

சுமார் 11,000 பேரை வெளியேற்றினால் போதும் என்று அரசு அதிகாரிகள் கூறுகிறார்கள், ஆனால் 106,000 பேரை அப்புறப்படுத்த வேண்டும் என்று அப்பகுதியில் நிலவும் கதிரியக்க அளவின் அடிப்படையில் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்;

வடக்கு உக்ரைனில் அமைந்துள்ள செர்னோபில் அணுமின் நிலையத்தின் 4 ஆவது உலையில் 1986 ஏப்ரல் 26ஆம் திகதி விபத்து ஏற்பட்டபோது அந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 1,30,000 பேர் வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர், இந்த விபத்தில் 31 பேர் உயிரிழந்தனர்; பெருமளவு கதிரியக்கம் பரவியது. (எ- 4)

## வெளிநாடு செல்ல ரஷ்யாவில் கட்டுப்பாடு தளர்வு

மாஸ்கோ, செப். 18

ரஷ்யா மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. இதனால் இந்த ஆண்டு 20 லட்சம் பேர் வெளிநாடுகளுக்குச் சுற்றுலா செல்வார்கள்: இரண்டு லட்சம் பேர் வெளிநாடுகளில் குடியேறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்ய விஸாதுறை தலைவர் குடாலப் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்; (எ)

## மகாராணி வரவேற்பு

லண்டன், செப். 18

கொமன்வெல்த் அமைப்பில் மீண்டும் பாகிஸ்தான் சேர்த்துக்கொள்ளப்பட்டதை இங்கிலாந்து மகாராணி எலிசபெத் மகாராணி வரவேற்று உள்ளார்;

# காட்டுத் தீயினால் நன்மை வருமா? அமெரிக்காவில் கருத்து வேறுபாடு

அமெரிக்காவின் வியாமிங் மாநிலத்திலுள்ள யெல்லோஸ்டோன் தேசியப் பூங்காவிலும் அடுத்துள்ள மேற்கு மாநிலங்களிலும் சமீபத்தில் ஏற்பட்ட மிக மோசமான காட்டுத் தீக்கள் 42 ஏக்கர் பரப்பிலுள்ள காடுகளை அழித்திருக்கின்றன;

இவை இந்த நூற்றாண்டிலேயே மிக மோசமானவை; காட்டுத் தீக்கள் எரியும் வரை எரியட்டும் என்று விட்டுவிடுவதா அல்லது அவற்றை அணைக்கும் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமா என்பதைப்பற்றி நிபுணர்களிடையேயான கருத்து வேற்றுமை இன்னமும் தீரவில்லை:

1970-க்கு முன் நூறு ஆண்டுகளுக்கு காட்டுத் தீக்களை அணைக்க முயற்சி செய்ய வேண்டுமென்பதே அதிகார பூர்வ கொள்கையாக இருந்தது;

ஆனால், காட்டுத்தீக்களால் ஏற்படுகிறதைவிட அவற்றை அணைத்துவிடுவதால் அதிக்க கொடுதல்தான் ஏற்படுவதாகச் சுற்றுச் சூழல் நிபுணர்கள் கருதுகின்றார்கள்;

### எரியவிடும் கொள்கை

காட்டுத் தரைகளில் ஏராளமாகக் குச்சிகளும் கட்டைகளும் குவிந்து போய்ப் பேராபத்து விளைகிறது;

அண்மைக்காலங்களில் அமெரிக்க தேசியப் பூங்கா நிர்வாகம்; உயிருக்கும் உடமைக்கும் சேதம் ஏற்படாத வரையில் காட்டுத் தீக்களை எரியட்டுமென விட்டுவிடுகிறது!

[illegible] காட்டுத்தீக்கள் மிகக் கடுமை[illegible] விட்டால், தீவிரமான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டுமென்ற கருத்து ஏற்பட்டிருக்கிறது:

இந்த ஆண்டில் சுமார் 30,000 தீயணைப்பு வீரர்கள் 350 மில்லியன் டலார் செலவில் காட்டுத் தீக்களை அணைப்பதில் ஈடுபடுத்தப்பட்டார்கள்

இந்த முயற்சியில் குறைந்தது ஏழு பேராவது பலியாகியிருக்கிறார்கள்;

இந்தத் தீக்களால் தங்களது உடைமைகளைப் பறிகொடுத்திருக்கிற மக்கள் "எரிகிற வரை எரியட்டும்" என்கிற அரசின் கொள்கையைக் குறை கூறத் தொடங்கியிருக்கிறார்கள்;

அமெரிக்கா ஒரு விஸ்தாரமான நாடாக இருந்தாலும், அது தனது காட்டுப் பிரதேசங்கள் எரிந்தால் எரியட்டும் என்று விட்டு விட முடியுமா, அவற்றை மற்றவற்றுடன் தொடர்பில்லாத தனிப்பட்ட தன்னிறைவு பெற்ற அமைப்புகளாகக் கருதி அவற்றின்கை வைப்பதில்லை என்று இருந்து விட முடியுமா என்பதை மையமாகக் கொண்டு வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று வருகின்றன;

மக்களின் அரசியல் ரீதியான நெருக்குதல் காரணமாகப் பூங்கா நிர்வாகம் தனது தலையிடாக் கொள்கையைக் கைவிட்டுக் காட்டுத் தீயால் அழிந்துபோன காட்டுப் பகுதிகளில் புதிய மரங்களை வளர்க்கவும், காட்டு விலங்குகள் தவிர்க்க நிலங்களுக்குள் உணவு தேடி வராமல் தடுப்பதற்காக அவற்[illegible] வேண்டிய உணவுகளைக் காடுகளுக்குள்ளேயே அளிக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தாகியிருக்கிறது;

### இயற்கையின் அங்கம்

காட்டுத் தீக்கள் இயற்கையின் செயல்முறைகளின் ஓர் அங்கம் என்கிற காரணத்தால் சுற்றுச் சூழல் நிபுணர்களும், வன வளப் பாதுகாப்பு ஆதரவாளர்களும் எரிகிற வரை எரியட்டும் என்கிற கொள்கையை ஆதரிக்கிறார்கள்;

குறிப்பிட்ட காலத்தில் ஒருமுறை ஒழுங்காக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற காட்டுத் தீக்கள் காட்டுத் தரையில் பட்டுப்போன மரக் குப்பைகள் குவிவதைத் தடுத்து; அவற்றிலுள்ள ஊட்டச் சத்துக்களை மண்ணுக்குள் திருப்பிச் செலுத்துகின்றன;

இந்த ஆண்டு மட்டும் காட்டுத் தரையில் ஏக்கருக்கு 40 டன்னுக்கும் மேற்பட்ட அளவில் கரித்துண்டுகளும் சாம்பலும் காட்டுத்தீயால் தாக்கப்பட்ட காடுகளில் பரவியிருந்ததாக நிபுணர்கள் மதிப்பிடுகிறார்கள்;

காட்டுத் தீக்கள் சில நாட்கள் எரிந்துவிட்டு மறைந்து விடுவதைப்போல இத்தகைய வாதப் பிரதிவாதங்களும் சில நாட்களுக்குத் தீவிரமாக நடந்துவிட்டு மறைந்துவிடும் என்பது விஞ்ஞானிகளுக்கு ஆறுதலளிக்கிற விஷயம்;

காட்டுத்தீக்களினால் அழிக்கப்பட்ட காடுகள் மீண்டும் துளிர்க்கத் தொடங்கிவிட்டதை அவர்கள் கண்கூடாகப் பார்க்கிறார்கள்;

காட்டுத்தீயின் பின் விளைவுகளைப் பற்றி முன்னெப்போதுமிருந்திராத வகையில் ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படப்போகின்றன;

அர்ச்சுனா
கல்வி — முயற்சி — பெருவாழ்வு
சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்
உங்களுக்குத் தெரியுமா?
நமது நாட்டில் மலரும் ஒரேயொரு சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ் அர்ச்சுனா
40 பக்கங்கள்
சிறுவர்க்கு பொழுது போக்குடன் அறிவுக்கு உசாத் துணையாக அமைவது அர்ச்சுனா
• சிறுகதை, கவிதை
• அறிவுலக அறிமுகம்
• பிறமொழிக் கதைகள்
• விளையாட்டரங்கு
• நகைச்சுவை
• சித்திரத்தொடர்
• கணிதப் புதிர்
இன்னும் பல அம்சங்கள்..
தமிழ் வாசகர் கரங்களில் மிக மலிவு விலையில் தவழும் ஒரேயொரு சிறுவர் சஞ்சிகை அர்ச்சுனா
சிறுவர் இலக்கிய அறிஞர்கள் ஆர்வலர்களின் படைப்புக்களையும் சிறுவர்களின் ஆக்கங்களையும் தாங்கி வெளிவருவது அர்ச்சுனா
விலை -5/= ஆண்டுச்சந்தா - 70/=
தபாலில் பெற விரும்புவோர் இத் தொகைக்குக் காசுக்கட்டளை / காசோலை பெற்று, நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்று எழுதி உதயன், த.பெ.எண் - 23. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.
மேலதிக விபரங்களுக்கு ;
யாழ்ப்பாணத்தில் : 'அர்ச்சுனா' பணிமனை 2ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
கொழும்பில் : முகாமையாளர் எஸ்.ஜீ.சீ. ட்ட்ம். 61, பெரதெனிய மாவத்தை,
உதயன் - சஞ்சீவ் வெளியீடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியகாலச் சேவையில் பரிட்சையமான
வர்களின் நவீன ஸ்தாபனம்!
★ எம்பாமிங் ★ பிரேதப் பெட்டிகள்
ஊர்வல வாகனங்கள் சேவையில்

★

பிறைற் ஹவுஸ்
[யாகப்பர் ஆலய அருகில்]
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

# உதயன்

19 09 · 1989 செவ்வாய்க்கிழமை

குழிக்குள் பிரேதம் இறக்கும் இயந்திரம்,
"டினவல்", ஒப்பின் காஸ்கற்ஸ்,
குறஸ் காஸ்கற்ஸ், மலர் வளையங்கள்

★

பிறைற் ஹவுஸ்
[யாகப்பர் ஆலய அருகில்]
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

## தங்கம் கடத்திய யாழ். பெண் கட்டுநாயக்காவில் கைது!

திருவனந்தபுரத்திலிருந்து தங்க பிஸ்கட்டுக்களை கடத்திக் கொண்டு வந்ததாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் மாட்டிக்கொண்டார்.

அவரிடமிருந்த ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 960 ரூபா பெறுமதியான தங்கப் பிஸ்கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

பெண்ணுக்கு முதலில் 3லட்சம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது. பின்னர் அபராதம் ஒரு லட்சம் ரூபாவாக குறைக்கப்பட்டது. (ஓ-எ)

## மாவிட்டபுரம் வரையில் பரீட்சார்த்த ரயில் சேவை

யாழ்ப்பாணம், செப். 19

சுன்னாகத்தில் இருந்து மாவிட்டபுரம் வரை நேற்று பரீட்சார்த்த ரயில் சேவை மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பில் இருந்து சிலீப்பர் கட்டைகளை ஏற்றி வந்த ரயிலே இந்த சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

மேற்படி ரயிலில் பாதை திருத்த வேலைக்கென 3 ஆயிரத்து 500 சிலீப்பர் கட்டைகளும் 45 அடி நீளமான 60 தண்டவாளங்களும் கொண்டு வரப்பட்டன.

ஏற்கனவே சுன்னாகம் வரை பரீட்சார்த்த ரயில் சேவைகள் பல தடவை மேற்கொள்ளப்பட்டன என்பது தெரிந்ததே. (ஓ-10)

## தரிசு நிலக் காணிகள் ஜனவரி முதல் சுவீகரிப்பு

### அமைச்சர் லலித் தகவல்

கொழும்பு, செப் 19

தரிசு நிலமாக விடப்பட்டுள்ள விவசாயக் காணிகள் வருகிற ஜனவரி மாதம் தொடக்கம் அரசினால் பொறுப்பு ஏற்கப்படும் என்று அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தரிசாகக் கிடக்கும் விவசாய நிலங்களைச் சுவீகரிக்கும் சட்டம் ஏற்கனவே கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் அது கடந்த பதினைந்து ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப் படவில்லை.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் அச்சட்டம் மீண்டும் அமுல் நடத்தப்படும் - என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (ஓ-எ)

## பாணந்துறை ஆற்றில் 55 சடலங்கள்!

கொழும்பு, செப் 19

கடந்த வாரம் பாணந்துறை ஆற்றில் 55 பேரின் சடலங்களைப் பொலிஸார் மீட்டனர்.

சீருடை அணிந்த சில குழுக்களினால் இவர்கள் கொல்லப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-எ)

## OBITUARY

### Miss. Myrtle Pushpamalar Rajaratnam

The death is announced of Miss. Myrtle Pushpamalar Rajaratnam (Retired Teacher Chundikuli Girl's College), beloved sister of Clara Poopalasingam, Late Dr. Prins, Late Bright (Attorney at Law), Late Victor and Grace, loving Aunt of Dr. Mrs. Rajini Selvaraja (U K), Dr. G. P. Rajaratnam (St. Michaels), Dr. Mrs. Dharmini Harichandran (California), L. R. Rajaratnam (Australia), Dr. Chandran Rajaratnam (New Jersey) and Mr. Shanthikumar Rajaratnam (New York).

Cortege leaves residence No 60, Rasavinthoddam Road, Jaffna at 8-00 A. M. on Wednesday 20 th September 1989 for burial at St. John's Church Cemetry, Chundikuli. (1956)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா பொன்னம்பலம்

உரும்பராய் தெற்கு செல்லத்துரை வீதியைச் சேர்ந்த திருமதி செல்லம்மா பொன்னம்பலம் 18-9 89 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அருமை மனைவியும், காலஞ்சென்ற ஜீவநாயகம் (நாசராசா) திருமதி மகேஸ்வரி, ஜெயராஜா ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி சரோஜாதேவி (கனடா) வின் அன்பு மாமியாரும், பவித்திகாவின் பேத்தியும், கணபதிப்பிள்ளை, செல்லத்துரையின் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 19-9 89 இன்று பி.ப 2.00 மணியளவில் உரும்பராய் வேம்பன் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:

திருமதி மகேஸ்வரி.

V. T. செல்லத்துரை வீதி,
உரும்பராய். (3348)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 228/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மர்லின் மன்றோ செருப்பு ரூபா $1\frac{1}{2}$ லட்சத்துக்கு ஏலம்

லண்டன், செப். 18

கடந்தவாரம் லண்டனில் ஏலத்தில் பிரபல கவர்ச்சி நடிகை மர்லின் மன்றோ அணிந்திருந்த செருப்பு ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு ஏலம் போனது.

புருடோரிகா நாட்டைச் சேர்ந்த வோரன் என்ற அரிய பொருள் சேகரிப்பாளர் இந்த நாலரை அங்குல ஹைஹீல் செருப்பை ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் எடுத்தார்.

மற்றொரு ஏலத்தில் பீட்டில்ஸ் ராக் இசைப் பாடகர்கள் பாடி பதிவு செய்திருந்த மாஸ்டர் டேப் ஏலத்திற்கு விடப்பட்டது. 3 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. மற்றொரு டேப் குறைவான ஏலத்துக்கு போனதால் அதை ஏலத்தில் விட உரிமையாளர் மறுத்துவிட்டார். (எ)

## மதுரைக் கலவரத்தில் 21 பேர் உயிரிழப்பு!

மதுரை மாவட்டத்தில் இடம் பெற்று வரும் சாதிக் கலவரத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 21 ஆக அதிகரித்ததாக அறிவிக்கப்பட்டது.

ஹரிஜனத் தலைவர் ஒருவர் பிராமண சமூகத்தினருக்கு எதிராக கூட்டம் ஒன்றில் பேசியதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்தே கலவரம் ஆரம்பமானது.

அப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த மேலும் ஆறு பிரிவு மத்திய ரிஸர்வ் பொலீஸ் படையை அனுப்பி வைக்கும்படி தமிழக அரசு, மத்திய அரசைக் கேட்டுள்ளது. (எ)

## உடன்பாடு நேற்று . . .

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

டம் கட்டம் கட்டமாக ஒப்படைக்கப்படும்.

### பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு

இக்கண் சன்காணிக்கும் பொறுப்பு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்படும்.

இலங்கையின் பாதுகாப்பு தலை அமைச்சர், வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இந்திய அமைதிப்படை தளபதி ஆகியோர் இக்குழுவில் இடம் பெறுவர்.

### இராணுவ நடவடிக்கை இடை நிறுத்தம்

இந்த உடன்படிக்கையில் செய்துகொள்ளப்பட்ட மற்றொரு முடிவின்படி அமைதிப்படையின் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை இடை நிறுத்தி வைப்பதற்கும் இந்தியா உடன்பட்டுள்ளது. இது எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமையில் இருந்து அமுலுக்கு வரும்.

பரஸ்பர நல்லிணக்க அடிப்படையில் இந்தியப் படைகளுக்கு எதிரான சண்டையை நிறுத்திக்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இதற்கு முன்னர் அதன் விருப்பத்தைத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### அவதானிகள் குழு

யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து அவதானிகள் குழு அறிக்கை சமர்ப்பிக்கும்.

இந்த அவதானிகள் குழுவில் இலங்கை இராணுவத் தளபதியும், இந்திய அமைதி காக்கும் படையின் தளபதியும் இடம்பெறுவர்.

இந்தக் குழு தேவைப்படும் போது உடனடி பதில் நடவடிக்கை எடுப்பதோடு அவசியமானால் மேலதிக நடவடிக்கைகள் குறித்து இலங்கை ஜனாதிபதிக்கு சிபாரிசுகளைச் செய்யும்.

### சமாதானக் குழு

அரசியல் கட்சிகள், வடக்கு-கிழக்கு பகுதிகளிலும், நாடாளுமன்றத்திலும், வெளியேயும் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள், இன ரீதியான குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட சமாதானக் குழு ஒன்றை அமைக்கும் முடிவை இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது.

வன்செயல்களை உடனடியாக நிறுத்துவது மாத்திரமன்றி, வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பேச்சுக்கள், சமரச முயற்சிகள், புரிந்துணர்வு ஆகியவற்றின் மூலம் உறுதிப்படுத்துவதும் இக்குழுவின் பணியாக இருக்கும்.

பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவிற்குத் தங்கள் சிபாரிசுகளைத் தெரிவிக்க சமாதானக் குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையை சகஜ நிலைக்குக் கொண்டு வரவும் அதைப் பயனுள்ள வகையில் செயல்படுத்தவும் சமாதானக் குழு உதவும்.

### அதிகாரப் பரவல்

மாகாணப் பொலீஸ் படையை அமைப்பது, மாகாண சபையை பயனுள்ள வகையில் செயற்படவைப்பது, இதற்கான தகுதிவாய்ந்த நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவது, மாகாண சபைக்கு விரைந்து அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது — போன்றவற்றைச் செயற்படுத்தத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை அரசு இந்தியாவுக்கு உறுதியளித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகத்தை வலுப்படுத்தவும் அமைதியையும் இயல்பு நிலையையும் ஏற்படுத்தவும் உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை அரசு கூறியுள்ளது.

புதன்கிழமை அமைதிப் படையின் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரும் அதேசமயம் சமாதானக் குழுவும் அமைக்கப்படும்.

நேற்றைய உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து அடுத்த மூன்று வாரங்களுக்கு இடையில் சமாதானக் குழுவின் முதலாவது கூட்டம் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-எ)

## பருத்தித்துறை --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ரங்கன் என்னும் பிரஸ்தாப இளைஞர் பூதராயர் ஒழுங்கையில் நின்ற சமயமே ஷெல் தாக்கி மரணமானார்.

நாகமுதலியார் வீதியில் வசிக்கும் திருமதி மணியம் குணரத்தினம் (வயது 48) படுகாயமடைந்தார். அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-118-160)

## ஹர்த்தாலை ---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் பஸ் எதுவும் ஈடுபடவில்லை.

வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் மட்டுப்படுத்தப்பட்ட உள்ளூர் சேவைகள் மட்டும் நடைபெற்றன.

பொதுமக்களின் நடமாட்டமும் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

நகரின் பல இடங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

## அன்னை திரேஸா தேறி வருகிறார்

கல்கத்தா, செப் 19

அன்னை திரேஸாவின் உடல்நிலை தேறி வருவதாக அறிவிக்கப்பட்டது.

காய்ச்சல் தணிந்து விட்டதாகவும் அன்னை நன்றாக ஓய்வு எடுத்துக்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## ரூபா நாலாயிரம்

குருநகர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 346 பேருக்கு நாளை புதன்கிழமை யாழ் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி பிரதான கிளையில் ரூபா 4 ஆயிரம் நிவாரணப் பணம் வழங்கப்படும்.

உற்பத்தி திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நிவாரணப் பணமான இந்த 4ஆயிரம் ரூபாவை பெறத் தகுதியுடையோர் கிராமசேவையாளர் உறுதிப்படுத்திய கடிதத்துடன் வங்கிக்குச் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ 10)

## முறியடிப்பு

யாழ்-கண்டுக்குளியில் உள்ள விற்பனைத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏழு மணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கிய இளைஞர் ஒருவர் காவலாளியின் சாதுரியத்தினால் பொதுமக்களின் உதவியுடன் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

பிடிக்கப்பட்ட இளைஞர் கச்சேரி அமைதிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டார் (ஓ-10)

## அடையாளம் காணப்பட்டார்

கடந்த புதனிரவு வவுனியா பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டவர் அடையாளம் காணப்பட்டார்.

இவர் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைச் சேர்ந்த தோமஸ் பஞ்சலிங்கம் (வயது 45) என்பவர் ஆவார்.

பிரஸ்தாப நபர் ஒரு மனநோயாளி என்றும் இரவு 11 40 மணியளவில் படையினர் முகாமொன்றைத் தாண்டிச் செல்ல முற்பட்ட போதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

## அரசு----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யமானது.

★ அமைதியை நிலைநாட்டிய பின்னரே அரசியலமைப்பை மாற்ற வேண்டுமா என்டதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

இப்போதைய ஜனாதிபதி முறை தொடரவேண்டும். அப்போதுதான் எல்லாச் சமூக மக்களின் நலனுக்கும் பதில் சொல்லக்கூடிய ஓர் அதிகாரமுள்ள தலைவர் இருக்க வாய்ப்பு உண்டாகும்.

இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் லீக் தூதுக்குழு ஜனாதிபதி திரு. பிரேமதாசவிடம் தெரிவித்தது.

அனைத்துக் கட்சிகள் மாநாட்டினை ஒட்டி அரசியல் கட்சிகளுடன் தனித்தனியாகப் பேச்சு நடத்தும் நிகழ்ச்சி நேற்று ஆரம்பமானது.

ஜனாப் ஏ அஸீஸ் தலைமையிலான ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தூதுக்குழுவும்; டாக்டர் எம். சி. எம். கலீல் தலைமையிலான அகில இலங்கை முஸ்லீம் லீக் தூதுக் குழுவும் ஜனாதிபதியுடன் நேற்று தனித்தனியாகப் பேச்சு நடத்தின.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது, ஏனைய கட்சிகள் பலவற்றின் பிரதிநிதிகள் அவதானிகளாகக் கலந்துகொண்டனர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, மக்கள் முன்னேற்ற முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அவர்களில் அடங்குவர். (அ)

## மரண அறிவித்தல்கள்

### அம்பலவாணர் சின்னத்துரை

இணுவில் மேற்கு அம்பலவாணர் சின்னத்துரை காலமாகிவிட்டார். இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும், திருமதி பதுமைசேனை மகாதேவன், மகிமைசேனன் (அண்ணா தொழிற்சாலை) கருணை சேனன் (சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை) சமரசேனன் [(பாட்டா), இ. போ. சபை கோண்டாவில்], யோகசேனன் (Director N E. C), ஸ்ரீ கலாசேனை சிவசுப்பிரமணியம், அருட்கலாசேனன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வைத்தியர் அம்பலவாணர் இராசாவின் சகோதரரும், க. க. பூபாலசிங்கத்தின் (சிவான் கூல்பார்) சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 20 - 09 - 89 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பகல் 11 மணியளவில் காவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

இ. பாலச்சந்திரன்

இணுவில் மேற்கு,
இணுவில். [2390]

### திருமதி மரியசம்பூரணம் அந்தோனிப்பிள்ளை

ஊர்காவற்றுறை மேற்கு திருமதி மரியசம்பூரணம் அந்தோனிப்பிள்ளை தமது 89ஆவது வயதில் 18-9-89 அன்று காலமாகிவிட்டார். இவர் பொலிஸ் உத்தியோகத்தர் காலஞ் சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், மரியஸ்ரெலா, யோன்துரைசிங்கம் (பொலிஸ் அத்தியட்சகர்) மேரிஸ்ரெலா, யேசுதாசன் (துறைமுக அதிகாரசபை) மரிய நாயகி, ஜெயசீலி ஆகியோரின் அன்புத்தாயாரும், பவுலப்பர் (கப்பல் இலாகாமாஸ்டர்), கமலா துரைசிங்கம், யோசப்ராஜன் (தொழிற்திணைக்களம் மன்னார்) பொன்ரேஸ்யேசுதாசன், ஞாலசுந்தரம் (விவசாயவிரிவுரையாளர் மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 20 9-89 புதன்கிழமை நாளை காலை 8 மணிக்கு புனித யாகப்பர் சேமக்காலையில் நடைபெறும்.

துயருறும்:

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

(2388)

### திருமதி இராஜேஸ்வரி விஸ்வலிங்கம்

திருமதி இராஜேஸ்வரி விஸ்வலிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற திரு. விஸ்வலிங்கம் (பெரியதம்பி) ஆசிரியரின் அன்பு மனைவியும், காலம் சென்ற அருளம்மாவின் அன்புச் சகோதரியும், திரு. அம்பலவாணரின் (இளைப்பாறிய ஆசிரியர், யாழ்/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை), அருமைத் தாயாரும், திருமதி சிவஞானேஸ்வரியின் (ஆசிரியை யாழ்/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அன்பு மாமியாரும். திரு வை. மகேஸ்வரன் (கனடா), Dr. வை. உருத்திரேஸ்வரன் ஆகியோரின் பெரிய தாயாரும், செல்வி கௌதமி, தேவந்தி. வருணி, சுமந்திரன், மைதிலி, துருவாசன், தனுஷியா, குமணன், நிரஞ்சனகுமரன், கிருபன், தர்மினி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 19- 09- 89 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அரியாலை கிந்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திரு. வி. அம்பலவாணர்.

801, கண்டிவீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (2206)

### திரு. இளையதம்பி சின்னத்துரை (புளியங்கூடல்)

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சின்னத்துரை அவர்கள் காலமாகிவிட்டார்கள். இவர் அன்னதேவியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற இளையதம்பி வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், சரவணையைச் சேர்ந்த கந்தையா தம்பதிகளின் மருமகனும், ஜெயகௌரி, ஜெயகுமார், நந்தகுமார், வரதகௌரி, சிவகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்தினி, நாகமுத்து. பார்வதி, திருக்கேதீஸ்வரம், நடராசா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 1989-09-19 (இன்று) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் புளியங்கூடலிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் சருவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மகன் ஜெயகுமார்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை. (2392)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org